# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**Vol. IV** **Issue 5** **August 2014**

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 2 |
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 10 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 11 |
| யோக வாழ்க்கை விளக்கம். . . . . . . | 13 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள். | 15 |
| பொன்னான நேரங்கள் . . . . . . . . . | 17 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 26 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 40 |
| **அன்னை இலக்கியம்** | |
| பார்வைகள் . . . . . . . . . . . . . . . | 42 |
| மாங்கனி. . . . . . . . . . . . . . . . . | 47 |
| ஜீவனில் நிறையும் எண்ணம். . . . | 63 |

**ஜீவியத்தின் ஓசை**

நல்லதற்கு
நடத்திக் கொள்ளும்
திறனுண்டு.

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

## XXVII. The Sevenfold Chord of Being

Page 262
Para 1

The ancient seers fixed on seven great terms of existence.

These terms are the foundation of all cosmic existence.

They are the sevenfold mode of all existence.
We have examined these terms.
We have discovered the gradations of evolution and involution.
We have arrived at the basis of knowledge.
We were striving towards this knowledge.
We have laid down the origin of reality.
We have declared about the continent of this reality.
We have declared that the initial, ultimate reality of all in the cosmos is triune.
It is the principle of transcendent, infinite Existence-Consciousness-Bliss.
That is the nature of divine being.
Consciousness has two aspects.
One is illuminating state and power of self-awareness.
The other is state and power of self-force.



## 27. சப்த ஜீவன்

பண்டைய முனிவர்கள் எழு பெரும் வகைகளாக வாழ்க்கையை வரையறுத்திருந்தார்கள்.
இவ்வகைகள் எல்லா பிரபஞ்ச வாழ்வுக்கும் அடிப்படையானவை.
இவை எல்லா வாழ்வுக்குமுரிய எழு மடங்கு முறைகளாகும்.
இம்முறைகளை நாம் ஆராய்ந்தோம்.
பரிணாமத்திற்குரிய நிலைகளை நாம் கண்டறிந்தோம்.

ஞானத்தின் அடிப்படையை நாம் அடைந்தோம்.
இந்த ஞானத்தை அடைய நாம் தீவிர முயற்சி செய்தோம்.
நாம் உண்மையின் ஆதியை விதி முறை செய்தோம்.
இவ்வுண்மைக்கான வரம்பை நாம் அறிவித்தோம்.
பிரபஞ்சத்தில், முதலும் முடிவுமான எல்லா உண்மைகளும் மூன்றொன்றானவை என விளக்கினோம்.
அத்தத்துவம் கடந்ததும், அனந்தமுமான சச்சிதானந்தம் ஆகும்.
அதுவே தெய்வீக ஜீவனின் தன்மை ஆகும்.
ஜீவியத்திற்கு இரு நிலைகள் உண்டு.
ஒன்று அறிவொளியூட்டும், தன்னையறியும் நிலை.
அடுத்தது சுய சக்தி படைத்த நிலையும் திறனும்.

By these two the Being possesses itself.

It does so in static condition.
It also does so in dynamic movement.
In its creative action it knows all within it.

It knows this by omnipotent self-consciousness.
It produces and governs the universe.
It governs its potentialities.
It does this by an omniscient self-energy.
This is the creative action of the All existent.
Its nodus is in the fourth principle of Supermind.

This intermediate principle is also called Real-Idea.

In this Supermind a divine Knowledge is one with self-existence.
It is also one with self-awareness.
It is one with a substantial Will.
This Will is in perfect unison with that knowledge.
The divine Knowledge develops infallibly the movement.
It is the movement and form and law of things.
They are in right accordance with their Truth.

They are in harmony with the significances of its manifestation.



இவையிரண்டின் மூலம் ஜீவன் தன்னைத் தனக்கு உடைமையாக்கிக் கொள்கிறது.
அது அசைவற்ற சமநிலையில் இதைச் செய்கிறது.
இயக்க நிலையிலும் அதைச் செய்கிறது.
தன் படைக்கும் செயலில் தன்னுள் அனைத்தையும் அறிகிறது.
அதை சர்வவல்லமை கொண்ட தன் ஜீவியத்தால் அறிகிறது.
அது பிரபஞ்சத்தை உருவாக்கி, ஏற்று நடத்துகிறது.
அதன் செயல்படுந்திறனை அது ஆள்கிறது.
அதை எல்லாம் அறிந்த சுய வலிமையால் செய்கிறது.
இது பரம்பொருளின் ஆக்க பூர்வமான செயல்பாடாகும்.
அதன் கருவான இடம் சத்திய ஜீவியத்தின் நான்காம் விதியில் உள்ளது.
இந்த இடைப்பட்ட தத்துவமும் முழு எண்ணம் என்று அழைக்கப்படும்.
சத்திய ஜீவியத்தில் தெய்வீக ஞானம், அதன் வாழ்வோடு இணைந்துள்ளது.
அது தன் சுய உணர்வோடும் இணைந்துள்ளது.
அது திடமான உறுதியோடு இணைந்துள்ளது.
இவ்வுறுதி அந்த ஞானத்துடன் பூரணமாக ஒன்றியுள்ளது.
தெய்வீக ஞானம், சலனத்தைக் குறையில்லாமல் வளர்க்கிறது.
அது பொருட்களின் சலனம், தோற்றம் மற்றும் சட்டமாகும்.
அவை அவைகளின் சத்தியத்துடன் சரியான உடன்பாட்டைக் கொண்டுள்ளன.
அவை அதன் வெளிப்பாட்டின் தனிச் சிறப்புகளுடன் ஒற்றுமை கொண்டுள்ளன.

Page 262
Para 2

The creation depends on a principle.
It moves between this biune principle of unity and multiplicity.
It is a manifoldness of idea.
It is also a manifoldness of force and form.

These are the expressions of an original unity.
The creation is an eternal oneness.
This oneness is the foundation of multiple worlds.
It makes their play possible.
Supermind therefore proceeds by a double faculty.
This faculty is comprehensive and apprehensive knowledge.

It proceeds from the essential oneness.
From this oneness it proceeds to multiplicity.

It comprehends all things in itself as itself, the One.
It apprehends separately all things in itself as objects,

These are objects of its will and knowledge.

In its original self-awareness all things are one being.

They are one consciousness, one will, one self-delight.
The whole movement of things is a movement of one.



சிருஷ்டி ஒரு தத்துவத்தைச் சார்ந்து உள்ளது.
இது ஒருங்கிணைந்த தத்துவமான ஒருமை மற்றும் பன்மைக்கிடையே இயங்குகிறது.
அது எண்ணம் சிறப்பான பல வகைகளாகப் பிரிந்ததாகும்.
மேலும் அது சக்தியும், உருவமும் பலவகைகளாகப் பிரிந்ததாகும்.
இவை மூலமான ஒருமைப்பாட்டின் வெளிப்பாடாகும்.
சிருஷ்டி என்பது ஒரு சாசுவதமான ஐக்கியம்.
எண்ணிறந்த உலகங்களுக்கு இவ்வைக்கியம் அடிப்படை.
அவைகளின்  லீலையை அது சாத்தியமாக்குகிறது.
எனவே சத்திய ஜீவியம் இரட்டைத் திறனுடன் தொடர்கிறது.
இத்திறன் காலத்தைக் கடந்ததும் காலத்திற்குட்பட்டதுமான ஞானமாகும்.
அது அவசியமான ஒருமைப்பாட்டிலிருந்து தொடர்கிறது.
இவ்வொருமைப்பாட்டிலிருந்து அது வேறுபாட்டிற்குச் செல்கிறது.
அது தனக்குள் அனைத்தையும், தானாக - ஒன்றாக அறிகிறது.
அது தனக்குள் அனைத்தையும் பொருட்களாகப் பிரித்து உணர்கிறது,
அவை அதன் உறுதிக்கும், ஞானத்திற்குமுண்டான பொருட்களாகும்.
அதன் ஆரம்ப, தன்னையறியும் நிலையில், யாவும் ஒன்றான ஜீவனாக உளது.
அவை ஒரு ஜீவியம், ஒரு உறுதி மற்றும் ஒரு சுய ஆனந்தம்.
பொருட்களின் முழுச் சலனம் அந்த ஒன்றின் சலனம்.

Supermind proceeds in its action from unity to multiplicity.

It then goes from multiplicity to unity.
It creates an ordered relation between them.

This creates an appearance of division.

But it is not a binding reality of division.

It is a subtle unseparating division.
It is a demarcation and determination within the indivisible.

Supermind is the divine Gnosis.
It creates, governs, upholds the world.

It is the secret Wisdom.
This Wisdom upholds our Knowledge and our Ignorance.

**ஜீவிய மணி**

சவாலும் வாதமும் அகங்காரத்தின் அகழிகள்.
அகந்தையழிந்தால் வாதம் எழாது.
வாதமுள்ளவரை அகந்தைக்கு வாழ்வுண்டு.



சத்திய ஜீவியம் ஒருமையிலிருந்து பலவாக மாறும் செயலைத் தொடர்கிறது.
பிறகு அது பன்மையிலிருந்து ஒருமைக்குச் செல்கிறது.
இவ்விரு செயல்களுக்கிடையே அது ஒரு சீரான தொடர்பை ஏற்படுத்துகிறது.
இச்செயல் இவைகளுக்கிடையே பிரிவினைக்கான ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகிறது.
ஆனால், அது பிரிவினையை கட்டாயப்படுத்தும் நிலையில்லை.
அது சூட்சுமமான, விலகாத பிரிவினை.
அது பிரிக்க முடியாத ஒன்றதனுள் உண்டான வரையறையும் தீர்மானமும் ஆகும்.
சத்திய ஜீவியம் என்பது தெய்வீக மறையியல் ஞானமாகும்.
அது உலகைச் சிருஷ்டிக்கிறது, ஆள்கிறது மற்றும் ஆதரவளிக்கிறது.
இது ஒரு மறைபொருளான பேரறிவாகும்.
இந்த ஞானம் நம் அறிவுக்கும், அறியாமைக்கும் ஆதாரமாக உள்ளது.

**ஜீவிய மணி**

எதிர்ப்பை மீறுவது வலிமை.
எதிர்ப்பு எழ முடியாதது ஆன்மிக வலிமை.
எழும் எதிர்ப்பு மனம் மாறி, பணிந்து பாராட்டுவது தூய்மையான ஆன்மிக வலிமை.

## இம்மாதச் செய்தி

# ஊருக்குத் திருமணம், உனக்கு நறுமணம்.





## Page 163: Only to Titan force their will lies prone

### அசுரனுக்கு மட்டும் அடிபணியும் மனஉறுதி

✡ மனித இதயத்தை உடும்புப்பிடியாய்ப் பிடித்து உலுக்கியது

✡ சுபாவத்தின் சுணக்கத்துள் தவறாது நுழையும்

✡ வலுவான சிறு வாழ்வின் அர்த்தமற்ற அதிதீவிர சிற்பிகள்

✡ ஆர்வத்தையும், ஆசையையும் செப்பனிட்டு சீர் செய்பவர்

✡ பிண்டமான மண்ணின் பிடி, சகதியின் சர்வவல்லமை

✡ ஜடத்தின் நரம்பு கலங்கிய கருத்தைத் தெரிவிக்கும்

✡ சொந்த நினைப்பின் அலங்கோலமான அமைப்புகள்

✡ எண்ணத்தின் இருண்ட அரண்மனைகள்

✡ பெருமையின் பெருவீச்சு விரித்த கடைகள்

✡ அழகெனும் ஆத்ம கோயிலை சூழ்ந்தன

✡ சிறுமையின் வண்ணம் கலைஞனின் நுட்பம்

✡ வாழ்வின் வளமையை வகுக்கும் கலைவண்ணம்

✡ அர்த்தமற்ற சிறு ஆபத்தை விபத்தாகத் திட்டமிடும் தேவதைகள்

✡ நேரத்தைக் கூட்டி, காலத்தைக் கணித்து

✡ ஆடையழகின் அனந்த குண அலங்காரம்

✡ அறியாமை நெஞ்சின் அஞ்ஞான சூத்திரதாரிகள்

✡ இடறி விழும் சொல்லின் செயலுக்கு இதமான வழி காட்டும் இறைவன்

✡ பெட்டைக் கோபம், விலங்கின் காமம் வெறுப்பைத் தூண்டும்

✡ நிலையற்ற எண்ணம், ஆழமற்ற பாசம்

✡ முகமூடியணிந்த மாயை புனையும் குறு முனிகள்

✡ மங்கிய கலரின் அழகையளிக்கும் மாண்புகள்

✡ மக்களாடும் மாறும் திரையரங்கில் நெளியும்

✡ ஒளியற்ற காட்சியில் ஒட்டாரமாகச் செயல்படும்

✡ நம் விதியை நிர்ணயிக்க முடியாத நாம்

✡ நடிகனாகப் பேசி, வீறாப்பாக நடந்து

✡ நாடகம் முடிந்து நாமனைவரும் கலையும்வரை

✡ ஒளிபொருந்திய காலத்துள், சூட்சுமமான இடத்துள்

✡ குட்டை மனிதனின் குறுகிய சட்டத்தை அமுல்படுத்தும்

✡ மெதுவாகப் புரண்டெழும் மனிதனைத் தடுக்கும்

✡ அவன் தளர் நடையை மரணத்தால் முடித்து

✡ க்ஷணம் வாழும் அற்ப ஜந்துவின் அன்றாட வாழ்வு

✡ மனித விலங்கின் மாட்சியைச் செல்லும்வரை

✡ இருண்ட தாழ்ந்த சுபாவம் கனிந்து ஆத்ம போர்வையாகி

✡ அறிவு புறஉலகை ஆர்வமாக நாடும்வரை

### ஸ்ரீ அரவிந்த சுடர்

புனிதம், பதம், பவித்ரம், பக்குவம் வாழ்விற்கும் யோகத்திற்கும் அடிப்படை. அரைகுறையான அடிப்படை எதையும் எப்பொழுதும் சாதித்ததில்லை. உள்ளதும் உயிரற்றுப் போவதே உண்மை. பண்பு சாதிக்கும், பண்பற்ற நிலை சாதனையைத் தடுக்கும்.



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/10. தானே ஆண்டவன் தனக்கெதிராக விளையாடுவதே லீலையின் இரகஸ்யம்

- லீலை, விளையாட்டு என்பது பலன் கருதாத செயல் ஆனந்தம் தருவதைக் குறிக்கும்.
- செயலைப் பயனுக்காகச் செய்கிறோம்.
- பயனற்ற செயலைச் செய்வது வீண் வேலை, எவரும் செய்ய மாட்டார்கள்.
- விளையாட்டு அது போன்ற செயல்.
- விளையாட்டில் இரு கட்சி உண்டு.
- ஒரு கட்சியை எதிர்த்து ஜெயிப்பது வெற்றி. வெற்றி சந்தோஷம் தரும்.
- எதிரியின் திறமைக் குறைவில் மறைந்துள்ளதைக் காண்பது திறமை.
- நம் திறமையைத் திறமைக் குறைவாக மாற்றி அதனுள் நாம் நம்மை இழப்பது உலகம் அறிந்த வழக்கத்திலுள்ளதல்ல.
- ஞானம் அஞ்ஞானமாக பிரம்மத்தால் தலைகீழே மாற்றப்-பட்டது மேல்மனம். மேல் மனத்தில் உள்ள பிரம்மம் ஆத்மாவாகி, சைத்திய புருஷனாக மாறி உயர்வது திருவுருமாற்றமான யோகம்.
- பிரம்மம் சிருஷ்டியுள் வந்து ஆத்மாவாகி, பிரபஞ்சம், மனம், வாழ்வு மூலம் ஜடத்துள் மறைந்து, ஜட இருளாகியது பூமாதேவியின் நிலை.
- அப்படி மறைந்த பிரம்மம் வெளிவரும் உஷைக் காலத்தில் சாவித்ரி ஆரம்பிக்கிறது.
- மறைந்ததை மறந்த நிலையில் நினைவுபடுத்துவது அருள், உஷைக் காலம்.

- ஒருவரே செஸ்ஸில் இருபக்கமும் விளையாட முடியாது.
- முடியும் எனில் ஒரு பக்கத்திலுள்ளபொழுது அடுத்த பக்க விளையாட்டு மறந்து போக வேண்டும்.
- இதுவே சிருஷ்டியின் இரகஸ்யம்.
- இதை நம் வாழ்வில் பலர் காண்கிறார்கள்.
- கம்பெனி முதலாளி தன் அதிகாரத்தை மானேஜர், சூப்பர்வைசர், தொழிலாளியிடம் கொடுத்து விட்டு அதிகாரத்தை செலுத்தாமல் வேலை வாங்கும் வாய்ப்பு எவருக்குமிருக்காது.
- ஒரு சிலருக்கு ஒரு சில அளவில் ஒரு சில காலம் இருப்பதுண்டு. அவர்கட்கு ஆண்டவன் பெறும் ஆனந்தத்தை வலியாக அனுபவிக்கும் நிலையுண்டு.
- அதைப் பெறுவது, லீலையின் ஆனந்தம்.
- கணவனை மனைவி அதிகாரம் செய்து ஆட்டிப் படைப்பதுண்டு.
- அந்தக் கணவன் ஆண்டவன் நிலையில் உள்ளவன்.
- அதுபோன்ற கணவன்மார்கள் இழந்த அதிகாரத்தைப் பெறுவதில்லை.
- இறைவனின் லீலை இல்லக் கிழத்தியின் அதிகாரமாகிறது.
- சிருஷ்டியின் இரகஸ்யம் வாழ்வின் இரகஸ்யமாவது இல்லறம்.

### ஜீவிய மணி

ஒரு மனிதருடைய வேதனை அடுத்தவரின் ஆத்ம சாதனையாவது வாழ்வின் வெற்றி. மனிதன் மற்றவரில் பூரிப்பாகப் பூரணம் பெறுவது ஆத்மா வாழ்வில் பெறும் சாதனை.



## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### *103.* ஜீவியம் நிறைந்து வழி விடுவது.

- துணி கிழியும் சப்தம் - உடலின் ஜீவியம் வழிவிடுவதாகும்.
- இது பகவான் கூறியது.
- மனம், உயிர், உடல் அடுக்கடுக்கானவை.
- சுமங்கலி நல்ல சகுனம்; நிறை குடம் நல்ல சகுனம்; சுமங்கலியின் நிறைகுடம் பெரிய நல்ல சகுனம்.
- நாம் அதை கவனித்தாலும், கவனிக்காவிட்டாலும், சகுனம் தன் வேலையைச் செய்யும்.
- சகுனத்தை அறிந்து அதன்படி செயல்படுபவன், ஆன்மிக முன்னேற்றம் பெறுவான்.
- மனத்தின் ஜீவியம் நிறைந்து உணர்வின் ஜீவன் திறக்க வழி விடுவது சகுனம் தெரிவது.
- டார்சியை லிஸ்லி திட்டுவது அவனுக்குக் கசப்பாக இல்லை. இது உயிரின் ஜீவன் ஆன்மிக விழிப்பால் நிறைந்து உடலின் ஜீவன் திறக்க வழி விடுவது.
- வழி விடுவது என்பது ஓட்டர் MLA ஆவது.
- பிரபஞ்சத்தைக் கடந்த பிரம்மத்திலிருந்து, பிரபஞ்சம், தெய்வ லோகம், யோகியின் லோகம், ரிஷியின் லோகம், முனிவர் லோகம், மனம், வாழ்வு, ஜடம் என ஒன்பது லோகங்களுண்டு. ஒன்று அடுத்த லோகத்திற்கு வழி விடும் நிலை ஏராளம்.
- விவசாயம், வியாபாரம், உத்தியோகம் ஜடமான முதல் நிலை.

- எளிமையான வேலையானாலும் அதன் மூலம் பணம் பெறலாம், செல்வாக்கு பெறலாம், பிரபலம் பெற்று பதவி பெறலாம். வாழ்வு ஜடத்திற்கு வழி விடுவது இது.
- இதே உயர்வை படிப்பு, ஜோஸ்யம், சங்கீதம், அரசியல், பாதுகாப்பு தரும் திறமை, கோர்ட்டில் வழக்காடும் திறன், வைத்தியம் போன்றவை மூலம் பெறுவதும் இதே வழி விடுவதாகும்.
- வழி விடுவது மேலே போகும், கீழேயும் போகும்.
- இவற்றையெல்லாம் கடந்த சிறப்புடையது நாணயம்.
- இதை ராசி, நல்ல ராசி, கெட்ட ராசி என்பது ஊர் வழக்கு.
- 300; 400 ஆண்டுகட்குமுன் இருளால் கவ்வப்பட்டிருந்த உலகம் இன்று ஒளியால் லேசாக நிரம்பியுள்ளது.
- அன்று ஆதரவற்றவர் அழிக்கப்படுவர்.
- அவர்கள் அழிவைத்தடுக்க நேர்மையாக, நாணயமாக, சட்டப்படி, எவரும் குறை கூற முடியாதபடி நடக்க வேண்டும்.
- ஆதரவு, பதவி, பணமுள்ளவர் எந்தத் தவறு செய்தாலும் உலகம் ஏற்கும். 'எந்தத் தவற்றையும் செய்வேன்' என்ற மனநிலை சமூக அந்தஸ்தைக் குறிக்கும்.
- அந்த நாட்களில் இங்கிலாந்தில் ஆப்பிள் தோட்டத்தில் ஒரு பழம் திருடிய சிறுவனுக்குக் கையை வெட்டி விடுவார்கள். கல்லூரி மாணவர்கள் கூடையாகப் பழம் பறித்தாலும் "இப்படிச் செய்யலாமா?" எனக் கண்டிப்பார்கள். அதற்கு தர்மம், நியாயம், தர்ம நியாயம் எனப் பெயர்.

### ஜீவிய மணி

*திட்டும் பெண் கிட்டும் அதிர்ஷ்டம்.*



## பொன்னான நேரங்கள்

மூலம்: ஸ்ரீ கர்மயோகி

சொற்பொழிவாற்றியவர்: N. அசோகன்

சொற்பொழிவாற்றிய தேதி: 24. 04. 2014

எல்லோர் வாழ்க்கையிலும் பொன்னான நேரம் அமைவதுண்டு. தன் கடந்த கால வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்ப்பவருக்கு இது பொருந்தும். தான் பள்ளியில் படித்த நாட்கள் பொன்னான நேரம் என்று ஒருவர் சொல்லுவார். பல ஊர்களுக்கு மாற்றலாகி வாழ்ந்தவர், ஒரு குறிப்பிட்ட ஊரை நினைவுபடுத்தி தான் அங்கு வாழ்ந்த நாட்கள்தாம் தன் வாழ்வில் பொன்னான நேரம் என்று கூறுவார். பல்வேறு தடைகளையும், எதிர்ப்புகளையும் மீறி, தாம் விரும்பிய பெண்ணையே கரம் பிடித்ததுதான் பொன்னான நேரம் என்று ஒருவர் சொல்லுவார். தாம் தொடங்கிய தொழில் பல வருடங்களாக மந்த நிலையில் இருந்து, ஒரு கட்டத்தில் சூடு பிடிக்க ஆரம்பித்தபோது அதையே அவர் பொன்னான நேரம் என்று சொல்லுவார். இப்படிச் சாதாரண மனிதர்கள் வாழ்க்கையில் பொன்னான நேரம் என்பது அவரவர்கள் சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடுகிறது. இப்போது அன்னை பக்தர்களுக்கு வருவோம். அன்னை இருந்தபோது அவரைப் பால்கனி தரிசனம் செய்தவர்கள் அதையே தன் வாழ்க்கையில் பொன்னான நேரம் என்று சொல்லுவார்கள். அன்னை சமாதியானபின் அவரிடம் வந்தவர்கள் அவரைப்பற்றிக் கேள்விப்பட்ட நேரம், அவரைப்பற்றிய புத்தகத்தைப் படித்த நேரம், அவருக்காக உள்ள தியான மையத்திற்கு வந்த நேரம் என்றிவற்றையெல்லாம் பொன்னான நேரமாகக் கருதுவார்கள்.

வாழ்க்கையில் இன்பமான நேரத்தை மட்டும் பொன்னான நேரம் என்று நாம் சொல்வதற்கில்லை. நாம் வாழ்க்கையில் சரியான முடிவை எடுக்கும் நேரமும் அவரவர் வாழ்க்கையில் வரத்தான் செய்கிறது. இப்படி முக்கியமான நேரமாக உள்ள சந்தர்ப்பங்களையெல்லாம் நாம் பொன்னான நேரம் என்று

சொல்லலாம். உதாரணமாக, பகவான் அலிப்பூர் சிறையிலிருந்து வெளியில் வந்தார். வந்தவர் மேற்கொண்டு என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் உள்ளேயிருந்து அசரீரி ஒன்று எழுந்து, ‘உலகை உய்விக்க புதுவைக்குச் சென்று யோகம் செய்’ என்று கட்டளை இட்டது. அந்த அசரீரியை பகவான் மதித்தார். அதன்படி அவர் புதுவைக்குச் சென்றார். அப்படி அவர் அந்த அசரீரியின் சொற்படி நடந்து கொண்டது அவருக்கு மட்டுமின்றி உலகிற்கே பொன்னான நேரமாக அமைந்தது. அம்மாதிரியே நேரு மற்றும் பட்டேல் இருவரும் வக்கீல் தொழில்தான் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களைச் சந்தித்த காந்திஜி அவர்களின் வக்கீல் தொழிலை விட்டுவிட்டு தாய் நாட்டிற்குச் சேவை செய்ய அழைத்தார். அதை அவர்கள் இருவரும் ஏற்றுக் கொண்டது இந்திய நாட்டிற்கே பொன்னான நேரமாக அமைந்தது. இன்று இந்தியாவில், **M.S.** சுவாமிநாதன் அவர்கள் உணவுத் துறையில் பிரபல விஞ்ஞானியாக உள்ளார். அவர் இளம் வயதில் **I.P.S.** தேர்வில் வெற்றி பெற்றார். அவர் அப்பாவோ அவர் போலீஸ் அதிகாரியாக வருவார் என்று நினைத்தார். ஆனால், சுவாமிநாதன் அவர்களோ போலீஸ் துறைக்குப் போகாமல் தமிழ்நாடு விவசாய பல்கலைக் கழகத்தில் விவசாயக் கலை படித்து, விவசாயத்தில் ஆராய்ச்சி-யாளராக உருவெடுக்கப் போவதாக அறிவித்தார். அப்படி ஒரு முடிவை அவர் எடுக்காமல் வெறும் காவல் துறை அதிகாரியாகப் போயிருந்தார் என்றால், நாடு ஒரு தலைசிறந்த விஞ்ஞானியை இழந்திருக்கும். ஆனால் அப்படி ஒரு முடிவை எடுக்காமல் விவசாயத் துறைக்கு அவர் வந்தது நாட்டிற்கு ஒரு பொன்னான நேரமாகும்.

சில பேருக்கு அவர்களுடைய அற்புதமான குண விசேஷங்-கள் வெளிவரும் நேரம் பொன்னான நேரமாக அமைகிறது. தனக்கு வயதாகிவிட்டதால் தன்னை பெண் பார்க்க வந்த வரனுக்கு தன் தங்கையை அலங்கரித்து அனுப்பிய பெண்ணிற்கிருந்த பரந்த மனப்பான்மை அவளுடைய குடும்பத்திற்கே பொன்னான நேரமாக அமைந்தது. ஏனென்றால்



விஷயத்தை அறிந்த வரன் அப்படிப் பரந்த உள்ளம் கொண்ட மூத்தவளைத் தான் மணந்து, தன் தம்பிக்குத் தங்கையை மணம் முடித்தான். பெண் பார்க்க வந்த வீட்டிலிருந்த சிறுவனுக்குத் தன் செலவில் பூணூல் சடங்கையும் செய்தான். பொதுவாக தனக்குத் தெரிந்தவருக்கு வாழ்க்கையில் நல்லது நடந்தாலே மனதில் பொறாமை எழுவதுண்டு. அடுத்தவர்களுக்குக் குபேர சம்பத்து வந்தபோதும் தன் மனம் பொறாமையால் பாதிக்கப்படாதவரும் உண்டு. அப்படிப்பட்டவருக்கு அந்த நேரம் பொன்னான நேரமாக அமைவதுமுண்டு. பொதுவாக நாம் யாரைத் திட்டினாலும் திட்டினை பெறுபவருக்குக் கோபம்தான் வரும். அதிலும் திருமண வாய்ப்பைக் கொடுக்கும் பொழுது அந்த வாய்ப்பினைப் பெறப் போகின்ற பெண்ணே அவனைக் கண்டபடி திட்டுகிறாள் என்றால், தாங்க முடியாத அவமானமும், ஆத்திரமும்தான் வரும். அப்படி நடக்காமல் அந்த நேரத்திலும் அவள் திட்டியதில் ஒரு உண்மை இருக்கிறது என்று அந்த உண்மையை ஏற்று என் மனதை மாற்றிக் கொள்கிறேன் என்பவனின் உள்ளம் ஒரு பொன்னான உள்ளமாகும். தான் செய்ய வேண்டிய வேலையைத் தனக்காக செலவு செய்து ஒரு உறவினர் செய்யும்போது அந்தச் செலவை தான் ஏற்று உறவினருக்குப் பணத்தைத் திருப்பித் தருகின்ற மனிதர் பொன்னான மனிதராவார். தன்மீது அவதூறு கூறிய காரணத்தினால் தொழில் கெட்டு, நஷ்டத்திலாழ்ந்து, திவாலாகிப் போனவரைப்பற்றிக் கேள்விப்பட்டு சந்தோஷப்-படாமல், அந்தச் சூழ்நிலையிலும் எதிரியை மீண்டும் நிமிர்த்த முயலும் உள்ளம் பொன்னான உள்ளம். அப்படிப்பட்டவர் சாதாரண மனிதரே இல்லை. அவரை ஒரு மாமனிதர் என்றுதான் சொல்ல வேண்டும்.

நம்முடைய ஆன்மாவின் நோக்கங்களை மதித்து அதற்கேற்-றாற்போல் நம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் அப்படிப்பட்ட வாழ்க்கை சீராக ஆற்றொழுக்காக அமைகிறது. திடீரென்று காரணமில்லாமல் குணம் கெட்டு அந்தப் பாதையைவிட்டு நாம் விலகிச் செல்லும்போது வாழ்க்கை தடுமாறுகிறது. ஒரு கட்டத்தில் விழிப்புணர்வு வந்து, மீண்டும்

சரியான பாதைக்குத் திரும்பும்போது அப்படித் திரும்புகின்ற நேரம் பொற்காலமாக அமைகின்றது. எவருமே ஒரு காரியத்தைச் செய்ய முன்வராதபோது தான் மட்டும் தைரியமாக அக்காரியத்தைச் செய்ய முன்வந்தால், அப்படி முன்வருகின்ற நேரம் பொன்னான நேரமாகும். ஹிட்லருடைய விமானப்படை இங்கிலாந்தைத் தாக்க முற்பட்டபோது, இங்கிலாந்து நாட்டு பொதுமக்களும், பெரும்பாலான அரசியல்வாதிகளும்கூட ஹிட்லருக்கு அடிபணியத் தயாராகி விட்டனர். ஆனால், சர்ச்சில் ஒருவர்தாம் ஹிட்லருக்கு சரணடையக் கூடாது. நாம் அவரை எதிர்த்துப் போராடி ஜெயிக்க வேண்டும் என்று வீர ஆவேசமாகப் பேசினார். அதை ஏற்றுக் கொண்டு அந்நாட்டு மக்களும், அரசியல்வாதிகளும் மனம் மாறி ஹிட்லரை எதிர்க்க முன்வந்தனர். அப்படி மனம் மாறிய நேரம் பொன்னான நேரம். அன்பான கணவரை இம்சை செய்து பார்க்கப் பிரியப்பட்ட மனைவி அவரிடம் ''ஒரு மணி நேரமாவது உன்னை ஜெயிலில் அடைத்து சந்தோஷப்படாமல் விடமாட்டேன்'' என்று சொன்னால், அப்படிப்பட்ட மனைவியிடம்கூட கணவன் பரிவுகாட்டிய நேரம் பொன்னான நேரம்.

உலக வரலாற்றில் ஆயுதம் ஏந்திப் போராடாமல் சுதந்திரம் பெற்ற முதல் நாடு இந்தியாதான். இங்கே ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். இந்தியா பலஹீனமான நாடாக இருப்பதால், அடிமை நாடாகிவிட்டது என்றெல்லாம் நாம் நினைக்கக் கூடாது. பாரதமாதாவின் அடிமைத்தனத்தை, நாம் கற்புக்கரசியின் கற்பிற்குச் சமமாக நினைகின்றோம். கணவருடைய முரட்டுத்தனத்திற்குப் பயந்து, பெண்கள் அடங்கிப் போவதுண்டு. கணவனுக்குக் கட்டுப்பட்டிருப்பது-தான் முறை என்று புரிந்து கொண்டு அதன்படி கட்டுப்-படுவதுண்டு. அப்படிப்பட்டக் கற்புக்கரசியின் கற்பின் வலிமை அல்பமான கணவனையும் சிறந்த மனிதனாக மாற்றும். கோயில் குருக்களுடைய பக்தியும், வழிபாடும் எப்படி விக்ரஹத்தைத் தெய்வமாக மாற்றுகிறதோ, அம்மாதிரியே கற்புக்கரசியின் மனவலிமை சாதாரண ஆண்மகனையும் தெய்வ மகனாக மாற்றும். அந்தக் கற்புத்தன்மை உச்சக்கட்டத்தை அடையும்



போது எமனிடமிருந்தே தன் கணவனின் உயிரை மீட்கக் கூடிய திறமையை அந்த கற்புக்கரசிக்கு அளிக்கிறது. இதை நாம் சாவித்ரி காவியத்தில் பார்க்கிறோம். இந்திய நாடு தானே ஒன்றுபட முன்வராதபோது அந்நியன் உள்ளே நுழைந்தால், அவன் நாட்டை ஒன்றுபடுத்துவான் என்று பாரத மாதாவிற்குப் புரிந்ததால், முகலாயர்கள் மற்றும் ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பாரத மாதா சம்மதித்தாள். இவ்வாறு அந்நியர், ஆதிக்கம் செலுத்த உள்ளே நுழைந்த நேரம் நாட்டில் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த நிறைய மக்கள் முஸ்லீமாக மாறினால், சமத்துவம் கிடைக்கும் என்று நம்பி அம்மதத்திற்கு மாறினார்கள். இப்படி இவர்கள் மாறினாலும்கூட இந்தியர்களாக இருப்பதில் அவர்கள் மனதில் வேறுபாடு வரவில்லை. நாட்டை ஆக்கிரமிப்புக்கு ஆளாக்கிய ஆங்கிலேயர்களுக்குதான் இந்துக்-களையும், முஸ்லீம்களையும் பிரித்து வைப்பதில் ஆதாயம் தெரிந்தது. ஆங்கிலேயர்கள் மத வேற்றுமையை வளர்த்த போதிலும் 1930-இல் நடந்த தேர்தலில்கூட முஸ்லீம்களுக்கு இந்துக்கள்மேல் துவேஷம் வரவில்லை.

அந்தத் தேர்தலில்கூட முஸ்லீம்கள் காங்கிரஸிற்குத்தான் ஓட்டுப் போட்டார்கள். இந்த நேரத்தில் ஆங்கில அரசாங்கம் இந்தியன் டொமினியன் ஆக்ட் என்ற ஒரு சட்டத்தை ஆங்கில பார்லிமெண்ட்டில் கொண்டு வந்தது. அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது நாட்டின் சரித்திரத்தில் ஒரு பொன்னான நேரம். அந்தப் பொன்னான நேரத்தின் அருமையை நாடு உணராமல் உதாசீனப்படுத்தி விட்டது. அப்படிச் செய்தது நம்முடைய துரதிர்ஷ்டமாகும். வாய்ப்பை ஒரு முறை நழுவ விட்டால் அது மீண்டும் வருவது கடினம். ஆனால் ஆண்டவனின் அருள் இந்தியாவிற்கு ஏராளமாகக் கிடைத்-துள்ளதால் அதே வாய்ப்பு மீண்டும் 1942-இல் இந்தியாவிற்கு கிரிப்ஸ் கமிஷன் மூலம் வந்தது. ''டொமினியன் ஆக்ட்டை முதலில் ஏற்றுக் கொண்டு பின்னர் நாளாவட்டத்தில் சுதந்திர நாடாக மாறிக் கொள்ளலாம், அப்படிச் செய்யும்போது நாட்டின் ஒற்றுமை கெட்டுப் போகாது, ஆகையால் கிரிப்ஸ் கமிஷன் அளிக்கும் சலுகைகளை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று

பகவான் காங்கிரஸ் தலைமையிடம் விண்ணப்பம் விடுத்தார். அப்படி பகவான் விண்ணப்பம் விடுத்த நேரம் பொன்னான நேரம் வைரமாக மாறிய நேரமாகும். பகவானுடைய விண்ணப்பத்தை மட்டும் காங்கிரஸ் தலைமை ஏற்றுக் கொண்டிருந்தால் இன்று இந்தியா, பாகிஸ்தான் என்று நாடு பிளவுபட்டிருக்காது. ஆனால் காங்கிரஸ் தலைமை அறிவில்லாமல் அதை நிராகரித்து விட்டது. காந்திஜி அவர்கள் ''அரவிந்தர்தாம் அரசியல் வேண்டாம் என்று துறவறத்திற்குப் போய் விட்டார். இப்போது ஏன் அரசியலில் தலையிடுகிறார்'' என்று இடக்காகக் கேள்வி எழுப்பினார். இரண்டாம் உலகப் போருக்கு முன்னால் பகவான் உலகின் சூட்சும நிலைமை என்ன என்று ஒரு கணக்கு எடுத்தார். சூட்சும உலகில் நெகட்டிவாக செயல்படக் கூடிய கரிய சக்திகள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்ததைக் கண்டார். இவற்றிக்கு எதிராக பாசிட்டிவ் சக்திகளும் ஒன்று திரள்வதையும் கண்டார். சூட்சும உலகில் இவற்றினிடையே மூண்ட போர் முடிவிற்கு வரவில்லை என்பதையும் அறிந்தார். ஜட உலகில் இதே-மாதிரியான போர் நிகழ்ந்தால்தான், இந்தப் போராட்டம் முடிவுக்கு வரும் என்று அறிந்தார். அப்படி நிகழ்ந்த உலகப் போருக்கு அன்னையின் போர் என்று பெயரிட்டார். பாஸிட்டிவ் சக்திகள் போரில் வெற்றி பெறவும், அவர் வழி செய்தார். இந்தச் சமயத்தில்தான் இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில் அவர்கள் பிரான்சும், இங்கிலாந்தும் ஒன்று சேர்ந்து ஜெர்மன் தாக்குதலை சமாளிக்கலாம் என்று ஒரு கருத்து தெரிவித்தார். பேசாமல் ஹிட்லருக்குச் சரணடைந்து விடுவோமா என்று பிரெஞ்சுத் தலைவர்கள் யோசித்துக் கொண்டிருந்த நேரம் இந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தார். பிரெஞ்சு தேசத்தின் வாழ்க்கை-யில் இது ஒரு பொன்னான நேரம் என்று நாம் சொல்லலாம். ஆனால் அசம்பாவிதமாக பிரெஞ்சுத் தலைவர்கள் இந்த யோசனையை ஏற்க மறுத்து விட்டார்கள்.

இதனால் இங்கிலாந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. 250 விமானங்கள் கொண்ட ஆங்கிலேய விமானப்படை 750 விமானங்கள் கொண்ட ஜெர்மானியப் படையை எதிர்கொள்ள



வேண்டியிருந்தது. இத்தகைய சூழ்நிலையில் எவரும் போருக்கு அழைத்தாலே பயந்து போவார்கள். ஆனால், சர்ச்சில் இளம் வீரர்களை அழைத்தபோது அவர்கள் சந்தோஷமாக தாய்-நாட்டிற்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்ய முன்வந்தார்கள். உயிரைத் துச்சமாக மதித்து வீரர்கள் போரிடும்போது ஒரு அசாத்திய வீரம் வெளிப்படும். அதன் காரணமாகத்தானோ என்னவோ ஜெர்மானியப்படை, ஆங்கிலேயர் படைகளைவிட மூன்று மடங்கு பெரியதாக இருந்தபோதிலும், ஜெர்மானிய வீரர்களால் ஆங்கில விமானப்படை தாக்குதலைச் சமாளிக்கவே முடியவில்லை. வந்த வேகத்திலேயே பின்வாங்கினார்கள். இப்படிச் சரணடைந்தால்தான் உயிர் பிழைக்கலாம் என்ற நிலைமாறி, தாக்க வந்தவர்கள் விரட்டியடிக்கப்பட்ட நேரம் இங்கிலாந்து நாட்டு வரலாற்றிலேயே ஒரு பொன்னான நேரமாகும். ஒரு தேசத்திற்கே பொன்னான நேரம் அமைவது போல தனிப்பட்ட நபர்களின் வாழ்க்கையிலும் பொன்னான நேரம் அமையத்தான் செய்கிறது. அதுவும் தேசத்தின் வாழ்க்கையில் திருப்புமுனை வரும்போது தனிநபர் வாழ்க்கையிலும் திருப்புமுனைகள் அமையப் பெற்றால் இரண்டும் ஒன்று சேர்ந்து தேசத்திற்கும் சரி, தனிநபருக்கும் சரி பொன்னான நேரமாக அமைந்துவிடும். இப்படி ஒரு பொன்னான நேரத்தைத் தன் வாழ்க்கையில் அனுபவித்தவர்தாம் கேரளத்தில் பிறந்து, இந்திய அரசாங்கத்தில் சிறப்பாகப் பணியாற்றிய **V. P. Menon** அவர்கள். கேரள மாநிலம் ஒரு சாதாரண மாநிலமே இல்லை. அத்வைதத்தைப் பரப்பிய ஆதிசங்கரர் அந்த மாநிலத்தில்தான் பிறந்தார். சேர நன்னாட்டிளம் பெண்களுடன் தோணிகள் ஓட்டி விளையாடியதாக பாரதியார் பாடியுள்ளார். கேரள மக்களுக்கு ஆங்கில அறிவு அதிகம். ஏழு, எட்டு வகுப்புகள் படித்த பிள்ளைகள்கூட ஆங்கிலம் நன்றாகப் பேசுவார்கள். மலைநாடு என்பதால் விவசாயம் குறைவு. அடுத்தபடியாக வேலை வாய்ப்பும் குறைவு. வெளிமாநிலங்-களுக்குப் பிழைப்புத் தேடிச் செல்பவர்கள் அதிகம். இந்தியா-வின் எந்த மூலைக்குச் சென்றாலும் அங்கே மலையாள நாயர் டீ கடை ஒன்றிருக்கும் என்று சொல்வார்கள். இப்படிப்பட்ட

மாநிலத்தில்தான் **V. P. Menon** பிறந்து வளர்ந்தார். ஒன்பதாம் வகுப்புடன் படிப்பை முடித்துக் கொண்டு வெளியூருக்குப் பிழைப்பிற்காகச் செல்ல வேண்டிய நிலை. சிறிது காலம் நிலக்கரி சுரங்கத்தில் வேலை செய்தார். பின்னர் அதுவும் பிடிக்காமல் டெல்லிக்குச் சென்றார். அங்கே சாலையில் எதிரில் வருபவரைத் தடுத்து நிறுத்தி, 'பதினைந்து ரூபாய் கொடுத்தால் பிழைத்துக் கொள்வேன், பெரிய மனது வைத்து நிதியுதவி செய்யுங்கள்' என்று கேட்டார். அவருடைய அதிர்ஷ்டம் யாரைத் தடுத்து நிறுத்தி நிதியுதவி கேட்டாரோ அவரும் தயங்காமல் அந்தப் பதினைந்து ரூபாயைக் கொடுத்தார். அந்த ரூபாயில் அவர் சிம்லா சென்றார். ஒன்பது வகுப்புதான் படித்தவர் எனும்போது அவருக்கு எப்படி அரசாங்க வேலை கிடைத்தது என்று தெரியவில்லை.

சிம்லாவிற்குச் சென்றவர் என்ன செய்தாரோ, ஏது செய்தாரோ ஒன்றும் தெரியவில்லை. எப்படியோ அரசாங்க சர்வீஸில் நுழைந்து விட்டார். அவருக்கு இருந்த ஆங்கிலப் புலமையை நன்றாகப் பயன்படுத்தி அசுர வேகத்தில் அரசாங்கப் பணியில் முன்னேறி **I. A. S. Officer**-ருக்கு இணையாக உயர்ந்தார். ஒரு கட்டத்தில் வைஸ்ராய் பதவியில் இருந்த மௌண்ட்பேட்டன் அவர்களுக்கே காரியதரிசியாகவும், அவருக்குப் பின்னால் உள்துறை அமைச்சராகப் பணியாற்றிய சர்தார் வல்லபபாய் பட்டேல் அவர்களுக்குக்கூட காரியதரிசியாகவும் செயல்பட்டார். 1947-ஆம் ஆண்டு அக்டோபர் மாத கால கட்டத்தில் பாகிஸ்தானைச் சேர்ந்த பட்டானியர்கள், காஷ்மீர் மாநிலத்தில் ஊடுருவியபோது அம்மாநிலத்தில் அரசனாக இருந்த திரு. ஹரிசிங் அவர்கள் உடனடியாக இந்திய இராணுவ உதவியை நாடினார். 'இந்தியாவுடன் காஷ்மீர் இணையும்பட்சத்தில் அவ்வுதவியைக் கொடுப்போம். இணைவதா, வேண்டாமா, எது நல்லது என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்' என்று மௌண்ட்பேட்டன் அவர்கள் திரு. ஹரிசிங்கிற்குச் செய்தி அனுப்பினார். அந்தச் செய்தியை கொண்டு போனவரே திரு. **V. P.** மேனன் அவர்கள்தாம். இரவோடு இரவாக காஷ்மீர் மகாராஜாவுடன் அமர்ந்து, நீங்கள்



இந்தியாவுடன் இணைவதைத் தவிர வேறுவழியில்லை. தனித்து பாகிஸ்தானை உங்களால் சமாளிக்க முடியாது என்று மகாராஜாவின் மனதில் படும்படி பேசி இந்தியாவுடன் காஷ்மீர் இணைவதற்கான **document**-களை உடனடியாகத் தயாரித்து அதில் மகாராஜாவின் கையெழுத்துகளையும் உடனடியாக வாங்கி 48 மணிநேரத்தில் காஷ்மீரை இந்தியாவுடன் சேர்த்த பெருமையை அடைந்தவர் **V. P.** மேனன் ஆவார். இதுமட்டுமின்றி இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னரே இந்தியாவில் சொந்தமாக சமஸ்தானங்கள் வைத்துக் கொண்டு மன்னராட்சி நடத்தி வந்த கிட்டத்தட்ட 540 இந்திய மன்னர்களையெல்லாம் ஒருங்கே சந்தித்து, 'இந்தியாவுடன் இணைவதுதான் உங்களுக்கு நல்லது. தனித்து செயல்படுவதோ அல்லது பாகிஸ்தானுடன் சேருவதோ நடவாத காரியம்' என்று அனைவருக்கும் புரியும்படிச் சொல்லி, சிக்கல் இல்லாமல் தகராறு இல்லாமல் காஷ்மீர் மகாராஜா மற்றும் ஹைதராபாத் நிஜாம் ஆகிய இருவரைத் தவிர மற்ற எல்லோரையும் இந்தியாவோடு இணையும் சாசனத்தில் கையெழுத்திட வைத்த பெருமை அவரைத்தான் சேரும்.

தொடரும்...

### ஜீவிய மணி

*விலை மலையையும் மண்ணாக்கும். விலை மதிக்க முடியாத விலை, விதியென சதி செய்யும். பகுதியின் விலை முழுமையின் கொடுமை. முழுமையின் விலை மனிதனுக்குட்பட்ட கர்மம். விலையின் நிர்ணயம் லோக வாழ்வின் நாணயம்.*

## அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

நினைவு (Memory) என்பது மனத்தின் ஒரு பகுதி. சமர்ப்பணத்தைச் செய்வது நினைவில்லை, (will power) மனத்தின் செயல் திறன். அழைப்பதும் (will power) அதுதான். (Memory, will) நினைவு, செயல்திறன் என்பவை மனத்தின் வெவ்வேறு பகுதிகள். அழைப்பின் மூலம் அன்னை சக்தி உள்ளே வருகிறது. சமர்ப்பணத்தில் நம் (will) விருப்பத்தை விட்டுக்கொடுக்கிறோம். ஆகவே, நினைவு, அழைப்பு, சமர்ப்பணம் ஆகியவை இந்த அளவில் வேறுபட்டவை ஆகும்.

பொதுவான சமர்ப்பணம் நாம் எடுத்துக்கொண்ட நோன்பானால், நம் அனைத்துச் செயல்களும் கதவைத் திறப்பது, ஒருவருக்கு இல்லை என்பது, மற்றொருவருக்கு உடன்படுதல், சாப்பிடுதல், பாங்கில் பணம் போடுதல், பேப்பர் படித்தல், பிரமோஷனுக்கு விண்ணப்பம் போடுதல் ஆகிய அனைத்துச் செயல்களையும், சிறியவை, பெரியவை எல்லா-வற்றையும் ஆத்மாவுக்குச் சமர்ப்பணம் செய்து, பின்னர் செய்தல் என்று பொருள். அப்படிச் செய்வதால் மனிதனுடைய (ego) அகந்தை விலகி, ஆன்மாவின் ஆதிக்கம் நம் முழு வாழ்வையும் சூழ்ந்து கொள்ளும். அது சிறப்பு. அச்சிறப்பின் மூலம் அன்னை பெருவாரியாகச் செயல்படுவார். இம்முறை ஒரு வகையில் எளிமையானது. சமர்ப்பணம் செய்தபின் சில சமயங்களில் நம் அறிவின்படியே நடக்க வேண்டியிருக்கும். சில சமயங்களில் நம் விருப்பத்தை விட்டுக்கொடுக்க வேண்டி-யிருக்கும். மற்ற சமயங்களில் நம் விருப்பத்திற்கு மாறாக நடக்க வேண்டியிருக்கும். என்றாலும் பொதுவாகச் சமர்ப்பணத்தை மேற்கொள்வது எளிது. வேறொரு வகையாகப் பார்த்தால், கடினமானது. எல்லாச் செயலையும் தவறாது சமர்ப்பணம் செய்ய வேண்டியிருப்பதால், சமர்ப்பணத்தைப் பூரணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதால் கடினம் என்றாகும்.



ஒரு செயலைச் சமர்ப்பணம் செய்யும்பொழுது அது சம்பந்தப்பட்ட எண்ணம், உணர்வு, செயல் மூன்றையும் சமர்ப்பணம் செய்வதே முறை. அந்த முறையைக் குறிப்பான சமர்ப்பணம், பிரச்சனையைச் சமர்ப்பணம் செய்தல், வாய்ப்பைச் சமர்ப்பணம் செய்தல், ஆகியவற்றில் எடுத்துக் கொள்கிறோம். பொதுவான சமர்ப்பணம் என்பதால் செயலில் செயல் பகுதியை மட்டுமே சமர்ப்பணம் செய்வதை இங்குக் கருதுகிறோம். அந்த வகையில் இது எளிது. வாழ்வின் எல்லாச் செயல்களையும் தழுவுவதால் கடினம். அகலம் கருதுதல் கடினமான முறை. ஆழம் கருதுதல் எளிமையான முறை.

### 5. ஒரு குறிப்பிட்ட செயலைப் பூரண சமர்ப்பணத்திற்கு எடுத்துக் கொள்ளுதல் (Consecration of a complete act all acts of that type):

சமர்ப்பணத்தை வாழ்க்கையின் எல்லாச் செயல்களிலும் கைக்கொள்ளுதல் யோகத்தைப் பூரணமாக ஏற்றுக்கொள்ளுதல் ஆகும். சாதகரில்லை, அன்பர் என்பதால், நான் சொல்லும் முறையின் பூரணப் புனிதம் யோகத்தைச் சார்ந்ததெனினும், அளவை அன்பரின் சந்தர்ப்பங்களைப் பொறுத்துக் குறைத்து, சாதாரண பக்தனுக்கும் சாத்தியமாகும்படிச் செய்ய முயல்-கின்றேன்.

ஆனால், ஏதாவது ஒரு வகையான காரியத்தை மட்டும் குறிப்பிட்டு அதன் எல்லைக்குள் சமர்ப்பணத்தைப் பூரணமாகக் கடைப்பிடிப்பது என்ற முறை இது.

நம் வாழ்வு, செயல்களால் நிரம்பியது. செயல்கள் பலதரப் பட்டவை. அளவு கருதியும், வகை கருதியும், செயல்கள் வேறுபடுகின்றன. உதாரணமாக நம் செயல்களை வீடு, ஆபீஸ், மற்ற இடங்கள் என்று பிரிக்கலாம். பணம் சம்பந்தப்பட்டவை, மனிதர் சம்பந்தப்பட்டவை, விசேஷங்களை ஒட்டியவை எனப் பிரிக்கலாம். குளிப்பது, சாப்பிடுவது, தூங்குவது, படிப்பது, குடும்ப நிர்வாகம், ஆபீஸ் கடமை, கடன் கொடுப்பது, வாங்குவது, கடைக்குச் சென்று சாமான் வாங்குவது, கடிதம் எழுதுவது போன்ற சுமார் 100, 200 செயல்களைக் கொண்டது

நம் வாழ்வு. அவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுப்போம். உதாரணமாக, பஸ்ஸில் பயணம் செய்வதை எடுத்துக் கொள்வோம். அது சம்பந்தப்பட்ட எல்லா (1) எண்ணங்களையும், (2) உணர்ச்சிகளையும், (3) செயல்களையும் சமர்ப்பணத்திற்குப் பூரணமாக, நூற்றுக்கு நூறு உட்படுத்துவோம். செயல் சமர்ப்பணத்தால் நிரம்பியவுடன் **(saturated)** அன்னையின் அருட்பிரவாகம் அதில் தெரியும். அதிசயிக்கத்தக்க முறையில் தெரியும். இந்த யோகப்பலனைப் பார்த்த பின், நமக்கு எந்த ஒரு செயலும் சமர்ப்பணத்தால் பூரண அருள் பெறும் திறன் ஏற்பட்டு விடுகிறது.

### 6. நம் முக்கிய பிரச்சனையைச் சமர்ப்பணம் செய்தல்:

சமர்ப்பணம் என்பது இறைவனை வாழ்வில் நம் தலைவனாகப் பிரதிஷ்டை செய்தல். ராமகிருஷ்ண பரமஹம்சரானாலும், ரமண மகரிஷியானாலும், பகவான் ஸ்ரீ அரவிந்தரானாலும், அன்னையானாலும் இவர்களை நெஞ்சார ஆழ்ந்து உணர்ந்த பக்தரால் நெகிழ்ந்து வழிபட முடியும். அடுத்த கட்டத்தில் வீட்டில் உள்ள ஒரு பிரச்சனையை, அதுவும் நம் சுபாவம் ஏற்றுக்கொள்ள மறுக்கும் பிரச்சனையைப் பக்தன் இப்படிப்பட்ட குருவுக்குச் சமர்ப்பித்து "நீங்கள் எந்த முடிவு சொன்னாலும், நான் அதைத் தெய்வ வாக்காகக் கருதி, அப்படியே இந்தக் காரியத்தில் கடைப்பிடிக்கிறேன்" என்று சொல்ல முன்வருவாரா, என்று கேட்டால் அதில் தேறுபவர்கள் உண்டு. ஆனால் மிகக் குறைவு. ஞானாநந்தரிடம் அப்படி ஒரு சிறப்பான சிஷ்யர் இருந்தார். அவர் கிழித்த கோட்டைத் தாண்டுவதில்லை. பக்தர் வீட்டில் பிள்ளை திருமணப் பிரச்சனை. பிள்ளைக்கும் பெற்றவர்களுக்கும் மாறுபாடு. பெற்றவர் ஞானாநந்தரின் அத்யந்த சிஷ்யர். அவரிடம் முறையிட்டார். சுவாமியோ, "பிள்ளை இஷ்டத்தில் தவறில்லை, மறுக்காதே" என்றார். சிஷ்யரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. "சுவாமி பெரியவர். எல்லாம் உணர்ந்தவர்தாம். ஆனால், கல்யாணத்தைப் பற்றி சுவாமிக்கு என்ன தெரியும்?" என்று



தமக்கே விளக்கம் கொடுத்து, சுவாமியின் அறிவுரையைப் புறக்கணித்தார். இதே காரணத்தால்தான், பெரியவர்கள் தங்களை அணுகி ஆலோசனை கேட்பவர்களுக்கு, அவர்களுடைய சுபாவத்தை ஒட்டி யோசனை சொல்வது வழக்கம்.

அன்னையை, வணங்கும் தெய்வமாகவும், வழிபடும் கடவுளாகவும் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் கொள்வது மிகச் சிரமம். அதனால் சிறப்பு. அதுவும் வாழ்க்கையில் முழுமையான வழிகாட்டியாகக் கொள்வது மிகச் சிரமம். அதனால் அதிக விசேஷம். இரண்டு லட்ச ரூபாயை 1970-இல் முதலிட்டு, திட்டமிட்டு, பாங்க் 33 இலட்சம் கொடுக்க இசைந்தபின் பாதி கூட்டாளியாகி, பணம் போட்டவருடன் ஒரு வருஷம் சேர்ந்து உழைத்து 2 இலட்ச முதல் 6 இலட்ச இலாபம் சம்பாதித்த நிலையில், தமக்கும் பணம் முதலிட்டவருக்கும் பிணக்கு ஏற்பட, "இந்த நிலையில் அன்னையின் கருத்தென்ன?" என்று தம்மையே கேட்டுக் கொண்டு, அன்னைக்குச் சண்டை பிடிக்காது என்று பதில் மனதில் கூறி, சண்டையைத் தவிர்க்க, தாம் தம் உரிமை, உடைமை, அனைத்தையும் தாமே முன்வந்து தியாகம் செய்வதே சரி என்று முடிவெடுத்து, கூட்டாளி கேட்காமலேயே, அவரிடம் தாம் நிபந்தனையின்றி விலகுவதாக ஒருவர் சொன்னார். உலகத்திலேயே இல்லாத ஓர் அற்புதம் 10-ஆம் நாள் நிகழ்ந்தது. திட்டத்தில் பாதிக்கு உரிமையுள்ளவர் விட்டுக்கொடுத்தார். முழுத் திட்டமும் **(project)** 10-ஆம் நாள் அவரைத் தேடி வந்தது. அன்னையை வாழ்வில் முழுமையாக ஏற்றுக்கொள்வதென்றால் இப்படியெல்லாம் நடக்கவேண்டியிருக்கும். அதற்கு அப்படிப்பட்ட பலன் உண்டு. 7000 ரூபாய் முதலிட்டு 1968-இல் தொழில் ஆரம்பித்து, 3 வருடங்களில் 3 தொழில்களை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தியவர் ஆசிரமத்திற்குத் தொழில் சம்பந்தமாக வந்து போகும் பொழுது, அன்னையின் இந்த மேற்கூறிய முறையைப் பற்றிக் கேள்விப்பட நேர்ந்தது. அவருடைய ஒரு தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் வந்தது. பொறாமைக்காரர்கள் பொங்கி வழியும்படி, கம்பெனியை மூட இன்னும் விரல்விட்டு எண்ணும் நாட்களே

உள்ளன, என்று பேசுமளவுக்கு நிலைமை முற்றிவிட்டது. முதலாளிக்கும் அது புரிந்தது. திடீரென ஒரு செய்தி நினைவுக்கு வந்தது. ஆசிரமத்தில் அவர் கேள்விப்பட்டதுதான். அதன்படி அன்னைக்கு ஒரு தந்தி கொடுத்தார். அன்றிரவு தொழிலாளிகள் கூட்டம் போட்டு, வேலை நிறுத்தத்தை நிறுத்த முடிவு செய்து, மறுநாள் வேலைக்குத் திரும்ப வந்து, தங்களுக்கெல்லாம் குறையாக எதுவும் இல்லை; பன்னிரண்டு தறுதலைகள் மட்டுமே இந்த மாதிரி எல்லாம் செய்கிறார்கள் என்று முதலாளி ஏற்கனவே அறிந்ததைப் பறைசாற்றினார்கள். அன்று மாலை, தொழிலாளர் தலைவனை, வாட்ச் திருடியதால் போலீஸ் கைது செய்து, “உங்கள் முதலாளி ஜாமீன் கொடுத்தால் விடுகிறோம்” என்று சொல்ல, மேனேஜ்மெண்டைச் சேர்ந்த அனைவரும், “பொன்னான சந்தர்ப்பம். பன்னிரண்டு பேருடைய ராஜினாமாவை வாங்கிக் கொண்டு ஜாமீன் கொடுக்கலாம்” என்றார்கள். பன்னிரண்டு பேரும் வேலைக்கு வரவில்லை. தாங்கள் ராஜினாமா செய்வதாகக் கூறினார்கள். அதனால் மீண்டும் வேலை தொடங்கியுள்ளது. முதலாளியோ அன்னை பக்தர் இல்லை. ஆசிரமம் வரும் சமயம் அங்குப் பல விஷயங்களைக் கேள்விப் பட்டவர். “தந்தி கொடுத்தேன். வேலை நிறுத்தம் முடிந்தது. இப்பொழுது அன்னை என்ன சொல்வார்?” என்று அவர் நினைத்தபொழுது, பழைய செய்தி ஒன்று நினைவுக்கு வந்தது. அதன் சாரமாவது: தன் கையில் உள்ள பிடியை வைத்துக்கொண்டு பேசுவது நம் பழக்கம். அன்னைக்கு உகந்த முறை அந்தப் பிடியை விட்டுவிட்டுப் பேசுவது. இது நினைவுக்கு வந்ததும், முதலாளி தாம் நேரே சென்று, அவனை ஜாமீனில் விடுதலை செய்துவிட்டு திரும்பி வந்தபொழுது, மேனேஜ்மெண்ட், ஆபீஸில் உள்ளவர்கள் முகம் பேயறைந்தது போலிருந்தது. முதலாளியோ, தாம் ஒரு பெரிய காரியத்தைச் செய்துவிட்டதாக உணர்ந்தார். மறுநாள் மாலை 12 பேரும் வந்து தங்கள் ராஜினாமாவை ஆபீஸில் டைப் செய்து கொடுங்கள்; கையெழுத்திட்டுத் தருகிறோம் என்று கூறி, அதன்படிச் செய்தனர். அன்றிலிருந்து இன்றுவரை அங்கு தொழிலாளர் தகராறு இல்லை.



முக்கியமான பிரச்சனை, முக்கியமான இடத்தில் ஏற்படுகிறது. அதில் முக்கியமான குணம் கலந்திருக்கும். முக்கியமான பிரச்சனையைச் சமர்ப்பணம் செய்வது என்றால் முக்கியமான குணத்தை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். எவ்வளவுதான் தப்பு என்று தெரிந்தாலும், எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டாலும், முக்கியமான குணத்தை மாற்றிக்கொள்ள எல்லோரும் முன்வரமாட்டார்கள். கன்னிமாரா ஹோட்டலில் **I.A.S.** ஆபீஸர்களுக்குப் பார்ட்டி நடக்கும்பொழுது 12 வருஷமாகத் தம்மிடமிருந்த டிரைவர், ஆபீஸர்களுடன் உட்கார்ந்து சாப்பிடுவதைப் பார்த்த முதலாளி அவனை டிஸ்மிஸ் செய்து, பின் மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் எடுத்துக்கொள்கிறேன் என்றபோது, அவன் அதற்கு உடன்படவில்லை. அவர் ஊரில் இல்லாதபொழுது, அவர் பெயரைச் சொல்லி அவருடைய காரைப் பாதி விலைக்கு விற்க முயன்றவன் அவன். அப்பொழுதும் அவர் மன்னித்துவிட்டார். இப்பொழுது அவனால் மன்னிப்புக் கேட்க முடியவில்லை. அதுவே முக்கியப் பிரச்சனைக்கு அடையாளம்.

பொதுவான சமர்ப்பணம் என்பது எல்லாக் காரியங்களையும் அன்னையை நினைத்துச் செயல்படுதல். இதை வாயால் சொல்வதே பழக்கம். அது ஜீவன் இல்லாத சமர்ப்பணம். “நான் இக்கடிதம் எழுதுவதை அன்னைக்குச் சமர்ப்பணம் செய்கிறேன். இந்தச் சாப்பாட்டைச் சமர்ப்பணம் செய்கிறேன்” என்பன போன்றவை. இதையே முழுமையாகச் செய்தால் வியப்பான பலன்கள் கிடைக்கும். இந்த 30 ஆண்டுகளாக இதுபோன்ற ஒருவரை நான் சந்தித்ததில்லை. நான் பொதுவான சமர்ப்பணம் என்ற தலைப்பில் குறிப்பிடுவதில் முதல் கட்டம் இது. அதில் அடுத்த மூன்று நிலைகள் உள்ளன. முதலில் எண்ணம், அடுத்தது உணர்வு, கடைசியாகச் செயல். சென்னைக்குப் போக வேண்டும் என்ற எண்ணம் தோன்றும் பொழுது, அந்த எண்ணத்தைக் கவனித்து, அதை நாம் ஏற்றுக் கொள்ளாமல் அன்னைக்குச் சமர்ப்பணம் செய்ய முயன்றால், எண்ணம் சமர்ப்பணத்தை மீறி, எப்பொழுது போவது, யாரைச் சந்திப்பது? என்று வேகமாகப் போய்க்கொண்டிருக்கும். அதன் பயணத்தை

நிறுத்தி, வேகத்தைத் தடுத்து, சமர்ப்பணம் செய்ய முடியாது. முடிந்தால் மனம் மௌனத்தில் திளைக்கும். அதீத சக்தி மனதில் அதே க்ஷணத்தில் சேரும். சமர்ப்பணம் அறுந்து போகாமல் தொடர்ந்து மனதில் இருந்தால், மனம் ஓடாது; எண்ணம் மறந்து போகும்; மனம் ஆழ்ந்த நிம்மதியடையும். அரை மணிக்குப் பிறகு யாரைச் சந்திக்கச் செல்ல வேண்டும் என்று நினைத்தோமோ அவர் நம்மைத் தேடி வருவதாகக் கடிதம் வரும். இதைப் பலரிடம் சொல்லியிருக்கிறேன். ஒரு முறை வெற்றியாகச் செய்து, பலன் பெற்று, ஆச்சரியப்பட்டு இருக்கிறார்கள். உணர்ச்சி, அடுத்த கட்டம். இதை விடுவது சிரமம்; பலன் அதிகம். சென்னைக்குப் போகலாம், தங்கையைப் பார்க்கலாம் என்றபொழுது அந்தச் செயல் சம்பந்தப்பட்ட எல்லா உணர்ச்சிகளும் ஒரே சமயத்தில் வந்து தலைதூக்கி, நம்மையும், அன்னையையும், சமர்ப்பணத்தையும் மறக்கச் செய்யும். சென்னைக்குப் போய்வந்து பல நாட்கள் ஆனபின் ஒரு குறை ஏற்படும்பொழுதுதான், சமர்ப்பணம் நினைவுக்கு வரும். மாறாக உணர்ச்சிகளையெல்லாம் கவனித்து, ஒதுக்கிச் சமர்ப்பணம் செய்துவிட்டால், உள்ளம் புளகாங்கிதம் அடையும். காரணமில்லாத சிறிய செயல்களுக்கெல்லாம் உடல் துள்ளும். சமர்ப்பணம் பலித்த நிலையில் நடக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம் சென்னைக்குப் போய், தங்கையைப் பார்த்து, மனம் நிறைந்து, காரியங்களைக் கலந்து முடிவு செய்து, பலன் ஏற்பட்டது போன்ற உணர்வைக் கொடுக்கும் நிகழ்ச்சிகள் பல தொடர்ந்து நடக்கும். சென்னைக்குப் போய் செய்ய வேண்டிய வேலை, போகாமல் முடிந்துவிட்டது தெரியவரும். இந்த ஒரு முறை சமர்ப்பணம் செய்தால், குறிப்பிட்ட வேலை பெரிய அளவில் நிறைவடையும். இதைவிடப் பெரியது உடல் அசைவுகளைச் சமர்ப்பணம் செய்தல். அதையும் ஒருவர் செய்துவிட்டால், அடுத்த கணம் விஷயம் பூர்த்தியாவதுடன், அதன் மூலம் தொடர்ந்து பல நல்ல நிகழ்ச்சிகள் நடந்தபடியிருக்கும். இவை-யெல்லாம் பக்தி மிகுந்தவரால் செய்யக்கூடியவையே. ஏற்றுக்-கொண்டு செய்தால் சிறப்பு. பொதுவான சமர்ப்பணத்தை



வாயால், மனத்தின் எண்ணத்தால், உணர்ச்சியால், உடல் அசைவுகளால் பூர்த்தி செய்வதைப் பற்றியவை இவை.

முக்கியமான பிரச்சனையைச் சமர்ப்பணம் செய்வது கடினம். ஏனெனில் அதில் முக்கியமான குணம் பின்னிக் கொண்டிருக்கும். அந்தக் குணத்தை விடாமல் சமர்ப்பணம் செய்ய முடியாது. இந்தப் பிரச்சனையைப் பொறுத்தவரையாவது அந்தக் குணத்தை மாற்றிக் கொள்ளாமல் இதைச் செய்ய முடியாது. இது கடினம் என்றாலும், சுபாவத்தை மாற்றுவதுபோல அவ்வளவு கடினமில்லை. சுபாவத்தை விட்டுக்கொடுப்பதே அதிகக் கடினம்.

முக்கியமான குணம் நம் பிரச்சனையில் கோபமானால், கோபத்தை இந்தப் பிரச்சனையைப் பொறுத்தவரையில் விட்டுவிட முன்வர வேண்டும். எப்படிப்பட்ட கோபக்காரனும், தன் முதலாளியிடம் கோபத்தைக் காட்டுவதில்லை. கோர்ட்டில் வாக்குமூலம் கொடுக்கும் பொழுதும் காட்டுவதில்லை. அதையே பிரச்சனையின் முக்கியத்தைக் கருதி, வாடிக்கைக்-காரரிடம், மனைவியிடம், தகப்பனாரிடம், மகனிடம், எளியவரிடம், பக்கத்து வீட்டுக்காரரிடம் பின்பற்றுதல் கடினம். பக்கத்து வீட்டுக்காரன் 3 அடி நம் மனைக்குள் வந்து சுற்றுச்சுவர் கட்டுகிறான். போலீஸ், பஞ்சாயத்து, சிபாரிசு எல்லாம் செய்து பார்த்தாகிவிட்டது. இனி முடியாது என்று கைவிட்ட நிலையில் “இப்பிரச்சனையில் கோபத்தை விட்டுவிட்டு, மனதிலும் கோபப்படாமல், சமர்ப்பணம் செய்ய வேண்டும்” என்று முடிவு செய்து சமர்ப்பணம் செய்தபின், பக்கத்து வீட்டுக்காரன் 3 அடி தள்ளி தன் மனையில் பள்ளம் தோண்டுவதைக் கண்டாலும் நம்ப முடியாது. கோபம் பலருக்கு வரும். ஆனால் மனிதர்களுக்கு முக்கியமான பிரச்சனைகளை வளர்க்கும் குணங்கள் ஏராளம். பிடிவாதம், பிறர் புண்படப் பேசுதல், புரளி பேசுதல், ஒட்டுக் கேட்பது, சுயநலம், அகராதி, தான் செய்ததைச் சரி என்று நிலைப்படுத்துவது, நண்பர்கள் மீது சந்தேகப்படுவது, அவசரம், வரவேண்டிய வருமானத்தைக் கணக்குப் போடுதல், மனக்கோட்டைக் கட்டுதல், தன் நியாய மனப்பான்மையின் உயர்வை நினைத்து வியத்தல், போன்ற தவறான குணங்களால்

மட்டும் முக்கியப் பிரச்சனைகள் வரும் என்பதில்லை. நல்ல குணங்களாலும் முக்கிய பிரச்சனைகள் வரும். குணம் நல்லதா, கெட்டதா என்ற ஆராய்ச்சியை விட்டு, ஒரு குணத்தால் பிரச்சனை ஏற்பட்டால் அந்தக் குணத்தை விட்டுவிட முன்வர வேண்டும். குறைந்தபட்சம், அந்தப் பிரச்சனையைப் பொறுத்தவரையிலாவது விட்டுவிட முன்வர வேண்டும். குணத்தை விடாமல், அதாவது பிரச்சனையை உற்பத்தி செய்த குணத்தை விடாமல், சமர்ப்பணம் செய்ய முடியாது. வாயால் சொல்லலாம். அதற்கு மேலே சொன்ன உடனடிப் பலன் இருக்காது. விடாமல் தொடர்ந்து சொன்னால் கொஞ்சம், கொஞ்சமாக நாள்பட்ட பலன் இருக்கும்.

நம்பிக்கை, உண்மை பேசுதல், விருந்தோம்பல், பிரியம், பாசம், பற்று, கடமையைச் செய்தல், மனச்சாட்சிக்குப் பயந்து செயல்படுதல், சட்டத்தைக் கடைப்பிடித்தல் போன்ற உயர்ந்த குணங்களாலும் முக்கியமான பிரச்சனை வரும். பொதுவாக எல்லா மனிதருக்கும் கெட்ட குணங்களால் பிரச்சனை ஏற்படும். நல்ல குணங்களால் ஒருவருக்குப் பிரச்சனை ஏற்பட வேண்டு-மானால், அவர் ஏற்கனவே உயர்ந்த நிலைக்கு வந்தவராயும், உயர்ந்தவராயும், செல்வம், அந்தஸ்து, நாணயம் உடையவராயும் இருப்பார். அவருக்கும் நல்ல குணங்களால் பிரச்சனை ஏற்படுவது குறைவு. ஆனால், நல்ல குணங்களால் அவர் வாய்ப்பை இழப்பதுண்டு.

1935-இல் காந்தி ஆசிரமம் நிறுவி, தம் வீட்டில் ஹரிஜனங்-களை வேலைக்கு வைத்துக்கொண்டு, ஹரிஜனப் பெண்ணுக்கு வேளாளர் குல மாப்பிள்ளையை மணமுடித்து ஒரு மிராசுதார் “காந்தி” எனப் பெயர் பெற்று விளங்கினார். இவருடைய பிள்ளை, **B.A.** முடித்து விட்டான். ஸ்ரீ **R.K.** சண்முகம் செட்டியார் அவருடைய நண்பர். பிள்ளையை ஆக்ஸ்போர்டுக்கு **(Oxford)** அனுப்ப, செட்டியார் ஒரு வார்த்தை சொன்னால் போதும். மிராசுதாருக்கு உதவி கேட்டுப் பழக்கம் இல்லை. 3 ஆண்டு-களாக பிள்ளையும், நண்பர்களும், உறவினர்களும் அவரை, “செட்டியாரைக் கேளுங்கள். பிரியமாகச் செய்வார்” என்று வற்புறுத்தியும் மறுத்துவிட்டார். அவரது குணம், நல்ல குணம்.



அதனால் பிரச்சனையில்லை; வாய்ப்பு போகிறது. பிறகு அவர் **R.K.S.**ஐ சந்திக்க நேரிட்டது. கேட்கவே நா எழவில்லை. செட்டியாரே முன்வந்து மிராசுதார் நிலையறிந்து தாமே விசாரித்து உதவி செய்தார்.

அன்னையிடம் நெருக்கம் ஆகும்பொழுது பிரச்சனை தீரும். நல்ல குணத்தால் பிரச்சனை ஏற்படுவது அபூர்வம். ஆனால் நல்ல குணத்திற்கும் முக்கிய பிரச்சனைகளை ஏற்படுத்தும் திறன் உண்டு. வருமானமில்லாத சகோதரனுக்கு வருஷக்-கணக்காக உதவுவது நல்ல குணம். ஆனால் உன் உதவியைப் பெற்ற சகோதரன் “உனக்குப் பச்சையாகத் தீங்கிழைப்பேன்” எனச் சபதமிட்டு உன் கண்ணெதிரே செயல்படுகிறான். உன் உத்தியோகத்திற்கு ஆபத்து, சொத்துக்கு நஷ்டம், நல்ல பெயர் கெடுகிறது, உயிருக்கும் ஆபத்து வருகிறது. உன்னால் உன் நல்ல குணத்தை மாற்றி, உன் உதவியை நிறுத்த முடியவில்லை. உதவியை நிறுத்தினால் சகோதரன் அடங்கிவிடுவான். இது நல்ல குணத்தால் ஏற்படும் தீங்கு.

ஒரு பெருந்தொழில் அதிபர். பழைய நண்பர்களையெல்லாம் தம் கம்பெனியில் உயர்ந்த பதவிகளில் அமர்த்தினார். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவருக்குத் தீங்கு செய்தனர்; கவிழ்க்கத் திட்டமிட்டனர். அவருக்கு ஒன்றரைக் கோடி நஷ்டம் வந்தது. அவரிடம் நடப்பதைச் சொன்னால், “ஏதாவது செய்யட்டும். நண்பர்கள் மீது நான் கடுமையாக இருக்க முடியாது” என்றார். அவர் அதிர்ஷ்டம், அவர் தம்மூருக்குப் போகும்போது பாண்டியில் தங்க ஆரம்பித்தார். தெய்வ பக்தியுள்ளவர். சமாதி தரிசனம் செய்வார். அடிக்கடி அது நடந்தது. நண்பர்கள் எல்லோரும் தங்கள் எண்ணம் பூர்த்தி ஆகாததால், ஒவ்வொருவராக அவரை விட்டுப் போய் விட்டார்கள். அதிபர் 10 கோடியிலிருந்து தம் கம்பெனிகள் 100 கோடிக்குப் போவதைக் கண்டு மகிழ்ந்தார்.

முக்கிய குணங்களால் முக்கியப் பிரச்சனை ஏற்படும். அவற்றைத் தீர்க்க அந்த விஷயத்தைப் பொறுத்தவரையிலாவது அந்தக் குணத்தை மாற்றிக்கொள்ள முன்வர வேண்டும். அப்படி இல்லை என்றால் மேலெழுந்தவாரியாகச் செய்யும் சமர்ப்பணம்

நாளாவட்டத்தில் பலன் தரும். அதுவும் இல்லையென்றால், வேறொரு வகையில் - தியானம், சேவை, காணிக்கை போன்றவை - அன்னையிடம் நெருக்கமாக வந்தால் பிரச்சனையின் தீவிரத்தைவிட அன்னையிடம் நெருக்கம் ஆகும்போது பிரச்சனை தீரும்.

***7. தொந்தரவான பிரச்சனையைச் சமர்ப்பணம் செய்தல்:***

சமர்ப்பணம் என்றால் என்ன என்று நமக்குத் தெரியும். பொதுவான பிரச்சனையைச் சமர்ப்பணம் செய்வதுபோலத்தான் குறிப்பான சமர்ப்பணமும். அதேபோன்றுதான் தொந்தரவான பிரச்சனையின் சமர்ப்பணமும் என நினைக்கத் தோன்றும். தொந்தரவு வந்து அதைச் சமர்ப்பணம் செய்யும்வரைதான் இந்த நினைவெல்லாம்.

தொந்தரவு பல வகைகளில் வரும். உத்தியோகத்திற்கு ஆபத்து வரும் போலிருக்கிறது; இருமல் வருவதைப் பார்த்தால், டாக்டர் செய்யச் சொல்லும் test எல்லாம் நினைத்தால் T.B. என டாக்டர் சந்தேகப்படுகிறார்; மகனுடைய நடவடிக்கையை நினைத்தால் இரவில் தூக்கம் வருவதில்லை. இதுபோன்ற தொந்தரவுகள் வந்து பல நாள் ஆனபின் யாராவது "சமர்ப்பணம் செய்தீர்களா?" எனக் கேட்கும் போதுதான் இத்தனை நாளாகச் சமர்ப்பணம் செய்யவில்லை என்பது நினைவு வரும். தொந்தரவு அஸ்தியில் ஜுரத்தை ஏற்படுத்தியபின் தொந்தரவு மட்டும்தான் நினைவிருக்கும். சமர்ப்பணம் நினைவுக்கு வாராது; அன்னைகூட நினைவுக்கு வாராது; நினைவுபடுத்திய பின்னும் சமர்ப்பணம் செய்யும் நிலையில் மனம் இருக்காது. "என்னை ஒன்றும் தொந்தரவு செய்யாதீர்கள். மனம் ஒரு நிலையில் இல்லை. இப்போது சமர்ப்பணத்திற்கெல்லாம் நேரமில்லை. இதெல்லாம் ஒரு வழியாக அடங்கட்டும்" என்று சொல்லத் தோன்றும். அப்படியும் மீறி சமர்ப்பணம் செய்ய முனைந்தால், சமர்ப்பணம் மூன்று நிமிஷத்தில் மறந்துபோகும். பிரச்சனை ஆயிரம் கோர ரூபங்களில் மனக்கண் முன் தாண்டவமாடும். இந்த நிலையில் என்ன செய்வது? நம் மனத்தை இரண்டாம் பேர்வழியாகச் செய்து அதனுடன் வாதாட



வேண்டும். அதனிடம், ''எத்தனை முறை அன்னை பெரிய சிக்கல்களிலிருந்து உன்னை விடுவித்துள்ளார்கள்? ஏன் இம்முறை இப்படிப் பிடிவாதம் செய்கிறாய்? அன்னையை நீ உனக்குத் துணையாக அழைக்காவிட்டால், உனக்கு யார் துணை இருப்பார்கள். உன் மகன் நடத்தை சரியில்லை என்றால், நீ இரவு, பகலாய் கவலையில் மூழ்கினால், அவன் மாறப்போகிறானா? உன்னால் அவனை வெளியில் அனுப்பாமல் இருக்க முடியுமா? அனுப்பியபின் அவன் நடத்தை உன் கட்டுப்பாட்டில் இருக்குமா? அவனைத் திருத்த யார் இருக்கிறார்கள்? எவரும் இல்லை என்று சொன்னால், அன்னையாலும் முடியாது என்று பொருள் அல்லவா? அன்னையை அழைத்தால் பிரச்சனை தீரும் என்று உனக்குத் தெரியாதா? மற்றவர்களைப்போல் பிரச்சனையை நினைத்தால், அது தானே வளரும். சமர்ப்பணம் சிரமமானால், முடியாதது என்று அர்த்தமா? எல்லோரும் செய்யும் தவற்றை நீ செய்யலாமா? மனதைத் திடப்படுத்திக்கொண்டு, அன்னையை அழைக்க முடிவு செய். அது மட்டுமே சரியான பாதை. அடம் பிடிக்காதே. கவலையைக் கருதாதே. அன்னையை நினைவுகூர். நீயே இப்படி இருந்தால், உனக்கு யார் சொல்வது? எழுந்திரு. அன்னையிடம் வா. மனதை மாற்று'' என்று மனதை அன்னையிடம் செலுத்தவேண்டும். தொந்தரவான பிரச்சனை கிளம்பிவிட்டால், மனிதன் நிலையிழந்து விடுவான். அன்னையை மறந்துவிடுவான். நினைவு வந்தாலும், அன்னையிடம் முறையிடும் அளவுக்குத் தெம்பிருக்காது. அந்நிலையில் முதலாவதாகச் செய்ய வேண்டியது மனதை அன்னையிடம் திருப்பி, அன்னை மீதுள்ள நம்பிக்கையைப் புதுப்பித்து, அன்னை நம் பிரச்சனையைத் தீர்ப்பார் என உறுதிபூண்டு, சமர்ப்பணத்தை ஆரம்பிக்க வேண்டும். இதுவே கடினமான கட்டம். இதைச் செய்துவிட்டால் பெரும்பகுதி வெற்றி கிட்டியதாகும்.

அடுத்த கட்டத்தில் சமர்ப்பணத்தை நினைவு கூரும் அளவுக்குப் பிரச்சனை இடம் கொடுக்காது. பிரச்சனையை ஒதுக்கி வைத்து, எண்ணம், உணர்வு, செயல் ஆகிய மூன்றையும்

சமர்ப்பணம் செய்தால், பூரண சமர்ப்பணத்தின் கீழ் கொண்டு வந்தால், பிரச்சனை நகர ஆரம்பிக்கும்; தீரும். அப்படியும் தடை இருந்தால் (**past consecration**) அப்பிரச்சனையின் பூர்வோத்திரத்தைச் சமர்ப்பணம் செய்தால், பிரச்சனை முழுவதும் கரையும்; பூரணமாக விலகும்.

ஒருவரால் தொந்தரவான பிரச்சனை வந்தபின்னும், அன்னையை நினைவு கூர முடியும் என்றால், அதைச் சமர்ப்பணம் செய்ய முடியும் என்றால், அவரால் செய்ய முடியாதது ஒன்றில்லை எனலாம். இது பெரிய திறன். இத்திறன் கைக்கு வந்தால், அன்னையிடம் பெரிய பேறுகளைப் பெறலாம்.

**௪. வாய்ப்பைச் சமர்ப்பணம் செய்தல்:**

சமர்ப்பணம் சம்பந்தப்பட்டவரை வாய்ப்புதான் (**opportunity**) மிகவும் கடினம். வாய்ப்பைச் சமர்ப்பணம் செய்வது எளிதன்று; மிகக் கடினம். தொந்தரவான பிரச்சனை வந்துவிட்டால், அன்னையை மறந்துவிடுவோம். அதன் பிறகும் அன்னை நினைவுள்ளவர் சிறந்த பக்தர். வாய்ப்பு அதைவிடச் சிரமம். ஒரு வாய்ப்பு வந்தபின் அன்னை நினைவு இருப்பது அரிது. அதன் பின்னும் அன்னை நினைவு இருந்தால், அவரைவிடச் சிறந்த பக்தர் இல்லை எனலாம்.

தாசில்தார் போன்ற ஆபீசரை முனிசிபல் சேர்மன் நிறுத்தி விசாரித்து, "எங்கள் வீட்டிற்கு வர வேண்டும்" என்று சொன்ன பிறகு, தாசில்தாருக்கு அன்னை நினைவு இருந்த இடம் தெரியாமல் போய்விடும். மனிதன் சாதாரணமானவன். வழியில் போய்க்கொண்டிருக்கும் ஒருவனைக் காரில் அவன் போகுமிடத்திற்குக் கொண்டுபோய்விட்டால், பாங்க் ஏஜெண்ட், வாடிக்கைக்காரருக்கு "உங்களுக்குப் பாங்கில் இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பணம் கொடுக்கலாம்" என்று சொல்லிவிட்டால்; கதாசிரியரைப் பார்த்து ஒரு புத்தகம் வெளியிடுபவர், "உங்கள் கதையை நான் வெளியிட விரும்புகிறேன்" என்றால்; நம் தெருவில் வசிக்கும் பார்லிமெண்ட் மெம்பர் தம் வீட்டு விருந்துக்கு நம்மை அழைத்துவிட்டால்; மனிதன் தன்



நிலையிழந்துபோகிறான். அன்னை மட்டும் அல்லர், அவனுக்கு எல்லாம் மறந்துபோகிறது. வாய்ப்பைச் சமர்ப்பணம் செய்வது என்ற பிரச்சனைக்கு இடமில்லை. அன்னை இவை போன்ற வாய்ப்புகளை மட்டும் கொடுப்பதில்லை. மலை போன்ற மனத்திடம் உள்ளவனுக்கும், நிலைகுலையும்படியான வாய்ப்பை அளிப்பது அன்னையின் வழக்கம். அன்னையின் இராஜ்யத்தில் பள்ளி ஆசிரியரை, துணைவேந்தர் வீடு தேடி வந்து பார்ப்பார். பிரதம மந்திரியின் அந்தரங்க நண்பர் எளிய பக்தனை நெருங்கி வந்து, "உங்களைப் பார்க்கவே வந்தேன். இன்னும் கொஞ்ச நாழி உங்களுடன் பேசப் பிரியப்படுகிறேன்" என்பார். "எங்கள் நாட்டு பார்லிமெண்டில் நீங்கள் வந்து உரையாற்ற வேண்டும்" என்று சொந்த ஊர் அசெம்பிளியிலும் பேசாதவருக்கு அழைப்பு வரும். இவை போன்ற வாய்ப்புகள் வந்தபின்னும் அன்னையை நினைந்து, சமர்ப்பணம் செய்து, தொடர்ந்து எல்லா எண்ணங்களையும், உணர்ச்சிகளையும், செயல்களையும் அந்த வாய்ப்புடன் தொடர்பு உள்ள அனைத்தையும் ஒருவர் சமர்ப்பணம் செய்கிறார் எனில், அது பெருஞ்சிறப்பு. உயர் தனிச்சிறப்பு. அவர்கள், நிகழ்ச்சிகளால் பாதிக்கப்படாதவர்கள், தன்நிலை குலையாதவர்கள். அப்படிப்பட்ட ஒரு (**discipline**) கட்டுப்பாட்டை நாம் மேற்கொண்டு, சாதித்தால், அது பெருஞ்சாதனையாகும்.

தொடரும்...

## ஜீவிய மணி

*ஐயம் திரிபு அற அடியேன் பிரம்மத்தின் ஆதி. பிரம்மத்திற்கு அடியேன் ஆதியும் அந்தமுமாகும். அடியேனே பிரம்மம், பிரம்மமே அடியேன்.*

## அன்பர் அனுபவம்

விதயகீதா, கும்பகோணம்

அன்னைக்கும் பகவானுக்கும் பல கோடி நன்றிகள்!

நம் விருப்பங்களை அன்னையின் அருள் அற்புதமாக நிறைவேற்றும் பாங்கினை அனுபவித்த அன்னையின் குழந்தை நான். நான் பிறந்ததும் என் அண்ணன் எனது அப்பாவின் பெற்றோர் வீட்டிற்கு அனுப்பப்பட்டதால், பள்ளி சேர்க்கும் வயது வந்தும், என்னை பள்ளியில் சேர்க்காமல் எனது பெற்றோர் காக்க வைத்தனர்.

எனக்குப் படிப்பதில் ஆர்வமுண்டு. ஆனால், என் குடும்ப சூழல், எனது அப்பாவின் வேலை நிலையற்றதாக இருந்ததால், ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் எங்கள் கல்வி தடைபட்டது. ஐந்தாம் வகுப்பில் ஒரு முறையும், பத்தாம் வகுப்பில் ஒரு முறையும் எங்கள் படிப்பு தடைபட்டது.

என்னை கல்லூரியில் சேர்க்கவே என் அப்பா தயக்கம் காட்டினார். பிறகு என் ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் என்று அனைவரின் வற்புறுத்தலுக்கு இணங்கி, எங்கள் ஊரான மயிலாடுதுறையில் கல்லூரி இருந்தும், என்னை திருச்சியில் உள்ள பெண்கள் கல்லூரியில் ஹாஸ்டலில் தங்க வைத்து படிக்க வைத்தார். நான் BSc., Chemistry மூன்றாம் வருடம் படித்துக் கொண்டிருக்கும்பொழுது அன்னையை நெருங்கினேன். அன்னையை நெருங்கியதன் முதல் பலன் என் அப்பா என்னை M.Sc., Chemistry course-இல் சேர்த்தது. என்னைத் தொடர்ந்த அன்னையின் அருள், என் அப்பா என்னை அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் B.Ed., படிக்க வைத்தது. அங்கு படித்த பொழுது, என் பேராசிரியர் ஒருவர் என்னைப் பார்த்து, 'இந்த வருடத்தில் சேர்ந்துள்ள 1360 மாணவர்களில் முதலாவதாக வரும் தகுதி உனக்குள்ளது. அதற்கான உழைப்பை நீ செய்தால் போதும்' என்றார்.



அதன்பின் என் வாழ்வில் பல திருப்பங்கள் வந்து போனபோதும், என் படிப்பு அன்னை வசம் இருந்ததால், பின்னாளில் Ph.D (Education) சேர்ந்து, அதையும் அன்னை தன் கருணையால் நிறைவேற்றி வைத்தார்.

ஒவ்வொரு ஐந்து வருடத்திலும் தடை ஏற்படுத்திய என் குடும்பச் சூழலை அன்னை தன் அளவற்ற அருளால் நிறைத்து, என் படிப்பைத் தொடரச் செய்தார்.

"எதற்கு பிரார்த்தனை செய்வது, எப்படிச் செய்வது என அறியாதவருக்கு அவர்கள் நாடும் சிறியதை மறுத்து, அவர்களுக்குரிய பெரியதைத் தருவது அன்னையின் வழக்கம்" - என்ற குருநாதர் அப்பாவின் சொல் என் படிப்பில் பலித்தது. உள்ளூர் காலேஜில் இருந்த அதே டிகிரியை வெளியூர் சென்று படிக்கிறேனே என்று புலம்புவேன். M.Sc.-க்கும் என் அப்பா என்னை உள்ளூரில் சேர்க்கவில்லை என்று வருந்தினேன். அன்னை என் ஏக்கத்தை நீக்குமாறு என்னை உள்ளூரில் உள்ள காலேஜிலேயே M.Phil Chemistry சேர்த்து, அதில் முதலாவதாகவும் தேர்ச்சி பெறச் செய்தார். என்னைப் பரவசப்படுத்திய என் இனிய அன்னைக்கு கோடானுகோடி நன்றிகள்!

### ஜீவிய மணி

சரணாகதி நோக்கமானால் எண்ணம் மௌனத்தின் வாயில். அதுவே ஜீவனின் இலட்சியமாவது உடலும் ஜீவனும் புளகாங்கிதம் தரும். அன்னை ஜீவியம் நம் ஜீவியமாவது சரணாகதியின் பூரணம். ஆன்மாவும் சுபாவமும் சரணாகதியை ஏற்றால் சரணாகதிக்கு வேலையில்லை.

## அன்னை இலக்கியம்

## பார்வைகள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

சமர்ப்பணன்

### 17. பூரணியின் பார்வை

பணத்தைத் தவிர வேறெதையும் சிந்திக்காதவர் என் அம்மா. எதையும், எவரையும் பணத்தைக் கொண்டுதான் அளவிடுவார். நானும் அவரைப் போலவே இருக்க வேண்டு-மென சொல்லி சொல்லி வளர்த்தார். ஆனால் எனக்கு சிறு வயது முதல் அம்மாவின் கருத்துகள், நடவடிக்கைகள், வாழ்க்கை முறை எதுவுமே பிடிக்கவில்லை.

எனக்கு இலக்கியம் படிக்க வேண்டுமென்று ஆசை. 'நீ கல்லூரிக்கே போக வேண்டாம். பத்து காசுக்கு பிரயோசன-மில்லாத படிப்பு' என்றார் அம்மா.

'எனக்கு விருப்பமில்லை என்றாலும் நீங்கள் சொன்னதற்காக வீணையும், நடனமும் படித்து அரங்கேற்றம் செய்யவில்லையா? எனக்கு பிடித்ததை படிக்க விடுங்கள்' என்று அம்மாவோடு போராடி அனுமதி பெற்றேன்.

அம்மா தொலைபேசி மூலம் ஒரே ஒரு முறை பேசியதும் எவருக்கும் சுலபத்தில் இடம் கிடைக்காத கல்லூரியில் குறைவான மதிப்பெண்கள் வாங்கியிருந்த எனக்கு உடனே இடம் கிடைத்தது. கல்லூரி முதல்வரும், தாளாளரும் வீட்டிற்கே வந்து விண்ணப்ப படிவங்களில் கையெழுத்து வாங்கிச் சென்றனர்.

'இதுதான் நீ பிடிக்கவில்லை என்று சொல்லும் பணத்தின் சக்தி. நமக்கிருக்கும் செல்வாக்கு, அதிகாரம், வசதி, வாய்ப்பு எல்லா-வற்றிற்கும் பணம்தான் காரணம். எந்த வழியில் வேண்டுமானா-லும் அதைச் சேர்க்கலாம்' என்று சொல்லிச் சிரித்தார் அம்மா.

முதல் நாள், முதல் வகுப்பில் மிகச் சிறந்த விரிவுரையாளர் என எல்லோரும் பாராட்டும் பெண்மணி பாடம் எடுத்தார். கல்லூரியின் பாரம்பரியத்தைப் பற்றியும், எப்படி மாணவிகள்



எல்லோரும் அதிகபட்ச மதிப்பெண்கள் எடுத்து தொடர்ந்து சாதனைகள் செய்து வந்திருப்பதையும் விளக்கிக் கூறினார். நாங்களும் அதே போல இருக்க வேண்டும் என்றார். எப்படி தேர்விற்கு தயார் செய்ய வேண்டும், எப்படி விடை எழுதினால் அதிக மதிப்பெண்கள் பெறலாம் என்றும் தெளிவாக விளக்கினார். அடுத்த வகுப்புகளில் பாடம் எடுத்த விரிவுரை-யாளர்களும் தேர்வுகளை எதிர்கொள்ளும் விதத்தையும், கட்டுரைகள், காவியங்கள், கதைகள் ஆகியவற்றில் எவற்றை மட்டும் வாசித்தால் அதிக மதிப்பெண்கள் பெற முடியும் என்பதையும் அருமையாக விளக்கினர். எல்லா மாணவிகளின் முகங்களும் மகிழ்ச்சியில் பிரகாசித்தன. முதல் நாளே பட்ட படிப்பில் வெற்றி பெற்றது போல அனைவரும் மகிழ்ந்தனர் - என்னைத் தவிர.

அன்று கல்லூரி முடிந்து காரில் வீடு திரும்பும் போது மனம் இருண்டிருந்தது. இதுவா இலக்கியப் படிப்பு? இதற்காகவா இவ்வளவு ஆர்வத்துடன் அம்மாவோடு போராடி இக்கல்லூரி-யில் சேர்ந்தேன்?

'தேர்வுகளைப் பற்றி கவலைப்பட வேண்டாம். வாழ்வை, அதன் எண்ணற்ற வண்ணவித்தைகளை, அதன் நுட்பங்களை, அதன் அனந்த அனுபவங்களை அறியும் வழிகளில் ஒன்று இலக்கியம். விதவிதமான அக அனுபவங்களை இலக்கியம் மூலம் பெறுவோம். உயர்வோம். மதிப்பெண்களை மறப்போம்' என்று ஒரே ஒரு விரிவுரையாளரோ, மாணவியோ நினைக்கக் கூட இல்லை என்பது அதிர்ச்சியாக இருந்தது.

என் மனக்கவலை தான் வெற்றி பெற்றதாக அம்மாவை உணர வைத்தது. 'நான்தான் அப்போதே சொன்னேனே! வாழ்க்கையில் எதுவும் சாதிக்க முடியாதவர்கள், தங்கள் தோல்வியை மறைத்துக் கொள்ள இலக்கிய முகமூடி போட்டுக் கொள்கிறார்கள். பிடிக்கவில்லை என்றால் படிப்பை விட்டுவிடு' என்றார் அம்மா.

வீட்டுச் சூழல் பிடிக்கவில்லை. கல்லூரிச் சூழல் பிடிக்க-வில்லை.

அடுத்த மூன்று ஆண்டுகளும் என் ஆர்வத்தை ஒட்டி மனம் போன போக்கில் படித்தேன். தேர்விற்காக படிப்பதை முற்றாக விலக்கினேன். விரிவுரையாளர்கள் என்னையும் என் போக்கை-யும் வெறுத்தாலும் என் அம்மாவின் செல்வாக்கின் மீதிருந்த அச்சத்தின் காரணமாக எல்லா சலுகைகளையும் தந்தனர். தேர்வுகளில் என் விருப்பப்படி விடைத்தாள்களை நிரப்பி வைத்தேன். நிச்சயம் தோல்வி அடைவேன் என்று எதிர்பார்த்-தேன். ஆனால் அம்மாவின் செல்வாக்கில் பல்கலைக்கழகத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றேன். நான் தோல்வி அடைந்தால் அம்மாவின் மரியாதைக்கு குறைவு வந்துவிடுமே!

மிகப் பெரும் ஆக்கங்களை வாசிக்கும் போது பக்குவம் வரும். அனுபவம் பெற்ற எழுத்தாளர்கள் ஆரம்ப காலத்தில் எப்படி எழுதி இருந்தாலும் மெல்ல மெல்ல தங்கள் எழுத்தின் மூலம் ஆன்மிக தரிசனம் பெற முயல்வதை உணரத் தொடங்கினேன். அதை உணர்ந்த போது என்னுள்ளும் ஆன்மிகத்தை பற்றிய கேள்விகள் எழத் தொடங்கின.

வழிபாடுகளையும், மதங்களையும் என்னால் ஆன்மிகம் என்று ஏற்க முடியவில்லை. ‘எது ஆன்மிக வழி?’ என்ற கேள்வி இடைவிடாது எழுந்து அதுவே மெல்ல மெல்ல அறிதலைப் பற்றிய ஆர்வாக்னியாக வளர்ந்து விட்டது.

ஒரு நாள் மதியம் கன்னிமாரா நூலகத்தில் புத்தகங்களை எடுத்துக் கொண்டு திரும்பும் போது, பெருங்காற்று வீசி கனமழை பெய்து கொண்டிருந்தது. ஆழமான சிறு நதிகளைப் போல தெருக்கள் மாறி விட்டிருந்தன. அகமும், புறமும் குளிர்ச்சியாக இருந்தது. போக்குவரத்து நின்று போய் தெருக்கள் காலியாக இருந்தன.

நதி வெள்ளத்தைக் கிழித்துக் கொண்டு மெல்ல நகரும் படகு போல என் கார் நகர்ந்து கொண்டிருந்தது. அண்ணாசாலையில் பேருந்து நிறுத்துமிடத்தில் ஒருவர் பெரிய புத்தகப்பை ஒன்றை கைகளில் வைத்துக் கொண்டு மழைச்சாரலில் புத்தகங்கள் நனைந்து விடக்கூடாதே என்ற தவிப்போடு நிற்பதை



கவனித்தேன். என்னைப் போல புத்தகப் பிரியர் போலிருக்கிறது. அவர் மீது பிரியம் ஏற்பட்டது.

காரிலிருந்து இறங்கி மழையில் நனைந்தபடி அவரை நெருங்கினேன்.

‘சார், இன்று பஸ், ஆட்டோ எதுவும் ஓடாது. நீங்கள் எங்கே போக வேண்டும் என்று சொல்லுங்கள். நான் இறக்கி விடுகிறேன்’ என்றேன்.

என் செயல் எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

அவர் புன்னகைத்தார். கண்களிலிருந்த ஆழமான அமைதி-யும், தீவிர ஒளியும் என்னை வெகுவாக கவர்ந்தன.

‘மிகவும் நன்றி. என்னை திருவல்லிக்கேணியில் இறக்கி விடுங்கள். அங்கு ஒரு நண்பர் வீட்டிற்குச் செல்ல வேண்டும்’ என்று மிகவும் நெருங்கிய உறவினர் போல சகஜமாகப் பேசிக் கொண்டே காரில் ஏறி அமர்ந்து கொண்டார்.

சற்று திகைப்புடன் அவரைப் பார்த்து விட்டு நானும் காரில் ஏறி அமர்ந்து கொண்டேன். வண்டி நகரத் தொடங்கியது. அவர் தன் முகத்தில் வழிந்த மழைநீரை கைக்குட்டையால் துடைத்து விட்டு, புத்தகப்பையையும் துடைத்தார். என்னைப் பார்த்து புன்னகைத்து விட்டு ‘எதற்கு சிரமம் என்று மரியாதைக்குக் கூட கூறாமல் காரில் ஏறிக் கொண்டு விட்டேனா?’ என்று கேட்டார்.

நானும் புன்னகையோடு ‘ஆமாம்’ என்றேன்.

‘என் பிரார்த்தனையைக் கேட்டு, பஸ்ஸிற்கு பதில் கார் கொண்டு வந்த உங்களை அவமதிக்கும் வெற்று சொற்களை நான் ஏன் கூறப் போகிறேன்?’ என்றார்.

நான் குழப்பத்தோடு ‘நீங்கள் என்னை வேறு யாரோ என நினைத்துப் பேசுகிறீர்கள். நாம் சந்திப்பது இதுவே முதல் முறை’ என்றேன்.

சில மௌன வினாடிகளுக்குப் பின் ‘சென்னைக்கு ஆடிட்டரைப் பார்க்க வந்திருந்தேன். அதன்பின் புத்தகங்களை வாங்கிக் கொண்டு கிளம்பும் போது மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. என் சிறு வசதிக்காக மழை நிற்க வேண்டுமென

நினைக்குமளவிற்கு என் மனம் இன்னமும் வறண்டு விடவில்லை. அதற்காக மழையில் புத்தகங்களோடு நனைய முடியுமா? என் இதயத்திலிருக்கும் பொன்னொளியிடம் பிரச்சனையை கூறிவிட்டு நின்று கொண்டிருந்தேன். பொன்னொளியின் பிரதிநிதியாக நீங்கள் வந்தீர்கள்' என்றார் அந்த மனிதர்.

'என்னையே பொன்னொளி என்று சொல்லவும் தயங்க மாட்டீர்கள் போலிருக்கிறதே' என்று வேடிக்கையாகச் சொன்னேன்.

'அதிலென்ன சந்தேகம்? அனைத்தும் பிரம்மம் என்பது ஆன்மிக உண்மையல்லவா?' என்றார்.

'எந்த ஆன்மிகப் பிரிவின் உண்மையிது?' என்று கேட்டேன்.

'பிரிவுகளற்ற ஆன்மிகத்தின் உண்மை அது' என்றார்.

'எனக்கு ஆன்மிகத்தைப் பற்றி தெரிந்து கொள்ள ஆர்வமுண்டு. ஆனால் நான் வாசிக்கும் புத்தகங்கள் ஒன்று கூட ஆன்மிகத்தைப் பற்றிய நிறைவான பதிலை எனக்குத் தரவில்லை.'

'விடைகள் அகத்தில் இருக்கும்போது புத்தகத்தில் தேடினால் எப்படி கிடைக்கும்?' என்றார்

'நீரில் மூழ்குபவன் மூச்சுக் காற்றுக்காக தவிப்பது போல ஆன்மிகத்தை அறியும் ஆர்வம் இருந்தால் வழி கிடைக்கும் என்று ஒரு ஞானி சொன்னாராம். என் ஆர்வம் சிறிது காலமாக அந்த அளவிற்கு தீவிரமடைந்து இருக்கிறது. ஆனால் வழிதான் இன்னமும் கிடைக்கவில்லை. என்னைப் போன்ற சாதாரணமானவளுக்கு ஆன்மிகம், யோகம் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ளும் கொடுப்பினை இல்லை' என்றேன்.

அவர் முகம் தீவிரமடைவதையும், கண்களில் மேலும் ஒளி கூடுவதையும் என்னால் பார்க்க முடிந்தது.

(வளரும்)

*கதைகளைப் பற்றியோ அல்லது பிறவற்றைப் பற்றியோ, சமர்ப்பணனனுக்கு எழுத விரும்பும் நண்பர்கள், தங்கள் கருத்துக்களை* **cs@motherservice.org** *அல்லது* **contact@motherservice.org** *என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தமிழிலோ, ஆங்கிலத்திலோ அனுப்பலாம். அவர் பதில் எழுதுவார்.*



## அன்னை இலக்கியம்

# மாங்கனி

வியாசபாதன்

*(கவி காசிதாஸ் வங்காள மொழியில் எழுதிய மகாபாரதத்தில் சத்தியத்திற்கு கட்டுப்படும் ஜடமான மாங்கனியின் கதை உள்ளது. ஆண்டுக்கொரு முறை தோன்றும் நாவல்கனி, பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் மாங்கனி என இதன் சற்றே மாறுபட்ட வடிவங்கள் ஒரிய மொழியிலுள்ள சரள மகாபாரதத்திலும், தமிழ்மொழியிலுள்ள வில்லி பாரதத்திலும் உள்ளன. பல்வேறு மொழிகளிலும் சிறு பாடபேதங்களோடு இக்கதை வாழ்ந்து வந்தாலும், மூலம் எது என எங்கும் குறிப்பிடப்படவில்லை. வியாச மகாபாரதத்தில் இக்கதை இப்போது இல்லை. பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்ததா என்று தெரியவில்லை. கதை சிறப்பாக அமையுமாயின் அப்பெருமை மகாபாரதத்திற்கும் அதைப் பதிவு செய்த மூதாதையருக்கும் உரியது. பிழைகளுக்கு நானும், என் அறியாமையுமே முழு பொறுப்பு.)*

பலகோடி ஆண்டுகளாக பசுமையை மட்டுமே அறிந்திருந்த வனங்கள், பகடையாடித் தோற்ற பாண்டவர்களின் பாதங்கள் பட்டபின் மெல்ல மெல்ல பசுமையிழந்து, பத்து ஆண்டுகளுக்குள் முற்றிலும் வறண்டுவிட்டன. பழிவாங்கும் வெறி அணைக்கமுடியாத காட்டுத்தீயாக பாண்டவர்களின் அகத்தில் எரிந்து கொண்டே இருந்தது. தீயாக எரியும் ஆண்மையை, நீராக மாறும் பெண்மையால் தணித்து, அணைத்து விட முடியும். ஆனால் பாண்டவர்களின் பழிவெறி நெருப்பை ஓங்கி வளர்க்கும் எரிநெய்யாக அவிழ்ந்த கூந்தலுடன் திரௌபதி, யக்ஞசேனி, கிருஷ்ணை, பாஞ்சாலி இருந்து வந்தாள்.

மனிதர்களின் மனவெப்பத்தோடு தணியாத கோபம் கொண்டுவிட்ட கதிரவனின் கடும்வெப்பமும் சேர்ந்ததால் வனங்களிலிருந்த செடிகளும், கொடிகளும், மரங்களும், கருகி மழை குறைந்தது. மழை குறைந்ததால் வனங்கள் மேலும்

வறண்டன. உணவையும், நீரையும் இழந்துவிட்ட புள்ளிமான்கள் துள்ளியோடும் சக்தியை இழந்து தள்ளாடி நடந்தன. இம்மான்களை வேட்டையாடினாலும் வறண்ட தோலும், எலும்புக்கூடுமே கிடைக்கும் என்பதை அறிந்துவிட்ட புலிகள் உறுமலோடு பாய்ந்து கொல்லும் தெம்பிழந்து ஊர்ந்தன. பசி, தாகம், வெப்பம், வெறுமை, இயலாமை மட்டுமே வனமெங்கும் வாழ்ந்தன.

'இது என்ன இடம் ? பிற வனங்களை விட அதிக வறட்சியுடன் இருக்கிறதே' என்றாள் திரௌபதி.

'அருகே துறவி எவரேனும் தவமியற்றிக் கொண்டிருப்பார். வேறு காரணமிருக்க வாய்ப்பில்லை' என்றான் சகாதேவன்.

எங்கு செல்கிறோம் என்று தெரியாமல் அவர்கள் மேலும் நடந்தனர்.

'சுவையான கனியின் வாசம் என் நாசியைத் தொடுகிறது. என் நாவில் நீர் ஊறுகிறது' என்றான் பீமன்.

சிரித்தான் யுதிஷ்டிரன். 'இத்தனை துன்பத்தில் பித்தர்களாகிவிடாமல் நம்மைக் காப்பது பீமனின் நகைச்சுவையே' என்றான்.

அனைவரும் சிரித்தனர்.

பார்த்தன் சிரித்தாலும் கண்களை சுருக்கி வெகுதூரத்தில் இருப்பவற்றை கூர்ந்து பார்த்தான். 'ஒரே ஒரு மாங்கனியோடு மரமொன்று செழித்து நிற்கிறது' என்றான். அவன் பார்வையிலிருந்து எதுவும் தப்ப முடியாது.

'ஒரே ஒரு கனிதானா' என்று கவலையோடு கேட்ட பீமன் அர்ச்சுனன் பார்த்த செல்திசையில் வேகமாக நடக்க ஆரம்பித்தான். மற்றவர்கள் அவனைப் பின் தொடர்ந்தனர்.

மரத்தை நெருங்கியதும் அதன் உச்சிக் கிளையில் மிகப் பெரிய பொன்னிற மாங்கனி ஒன்று பழுத்து கீழே விழும் நிலையில் தொங்கிக் கொண்டிருந்ததை அனைவரும் கண்டனர்.

வலக்கையை கனியை நோக்கி நீட்டினாள் கிருஷ்ணையான திரௌபதி. 'பசியால் மழுங்கிப் போன பசியுணர்வு, கனியைக்



கண்டதும் உயிர் பெறுகிறது. கனி எனக்குக் கிடைக்குமா?' என்றாள் திரௌபதி.

பாஞ்சாலி கூறியதை பிறர் புரிந்து கொள்ளுமுன்னே அவளது நீட்டிய வலக்கையில் மாங்கனி விழுந்தது. திரௌபதி தன் ஆசையை வெளியிட்டு முடிக்குமுன்பே செயல்பட்டு விட்டான் பார்த்தன். அவன் வில் எடுத்ததையோ, கணை தொடுத்ததையோ, சரம் சீறிச் சென்றதையோ, அது கனியைக் கொய்ததையோ எவரும் காணவில்லை. திரௌபதியின் கையில் விழுந்த மாங்கனியையே அனைவரும் கண்டனர்.

அர்ச்சுனனைப் பார்த்து திரௌபதி பிரியத்துடன் புன்னகைத்தாள்.

யுதிஷ்டிரனின் மனம் குரோதத்தால் ஒரு கணம் நிரம்பியது. 'என்றும் திரௌபதிக்கு விஜயனே பிரியமானவன். அப்பிரியம் குறைந்து விடாதபடி விஜயனும் கவனமாக இருக்கிறான். மற்றவர்களை அவள் கணவர்களாக மதிப்பது அன்னையின் ஆணையை ஏற்குமாறு விஜயன் கூறியதனால் மட்டுமே. தன் சகோதரர்களுக்கு பார்த்தன் இட்ட பிச்சை பாஞ்சாலி.'

பீமனின் மனமோ மாங்கனியின் செழிப்பைக் கண்டு மயங்கியது. அதன் ருசியை அறிய விழைந்தாலும், மனைவியின் பசி தீருமுன் தான் உண்ணக் கேட்பது சரியல்ல என்று மௌனமாக இருந்தான். அவளே முழுக் கனியையும் உண்டு விடுவாளோ என்று ஒரு கணம் அஞ்சினான்.

திரௌபதியின் புன்னகை தன் பிரியத்தை அவள் ஏற்பதன் பதாகை என்றுணர்ந்த பார்த்தன் பெண்ணின் அடுத்த ஆணையை எதிர்பார்த்து காத்து நின்றான்.

நகுலனோ திரௌபதிக்கு தான் கனியூட்டுவது போல அழகிய சித்திரம் எழுதினால் என்ன என்று சிந்தித்தான். கனியால் வரப் போகும் ஆபத்து அவன் மனத்தில் மின்னலாகத் தோன்றியது. அடுத்த கணமே அதை அவன் மறந்துவிட்டான்.

'பருவமற்ற காலத்தில் பழுத்த ஒற்றைக் கனி! இதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும். அதை அறியாமல் அர்ச்சுனனும்,

திரௌபதியும் அவசரப்பட்டுவிட்டார்களே. இதனால் என்ன சிக்கல் உருவாகுமோ! அதை எப்படி எதிர்கொள்வது?’ என்ற சிந்தனையில் ஆழ்ந்தான் சகாதேவன்.

வெயிலில் வாடி மூடிவிட்ட சிறிய இதழ்களைக் கொண்ட தாமரை போலிருந்த தன் வாயருகே திரௌபதி கனியை கொண்டு சென்றபோது, ‘நிறுத்து திரௌபதி’ என்று கூறிக்கொண்டே ரதத்திலிருந்து இறங்கினான் கிருஷ்ணன். ரதம் உருண்டோடி வந்த ஓசை கூட கேட்காத அளவிற்கு பாண்டவர்களின் செவிகளைப் பசி அடைத்திருந்தது.

‘என்ன காரியம் செய்யத் துணிந்தாய் திரௌபதி? இம்மாமரம் சந்தீப மகரிஷிக்குரியது. இது நாளொன்றுக்கு ஒரே ஒரு மாங்கனி தரும் மரம். தினமும் அதிகாலையில் தியானமியற்றத் தொடங்கும் ரிஷி அஸ்தமனத்திற்குப்பின் நீராடி இங்கு வருவார். கனியைப் புசித்து பசியாறுவார். மகாஞானியான அவரது சினத்தை எதிர்கொள்ளும் வலிமை உலகில் எவருக்கு-மில்லை. இன்னும் சற்று நேரத்தில் ரிஷி திரும்பியதும் அனைவரும் அழியப் போவது உறுதி’ என்றான் கிருஷ்ணன்.

‘புருஷோத்தமா, உன் பாதங்களைப் பணிகிறேன். திரௌபதி-யின் மீது தனக்குள்ள தனிப்பிரியத்தைக் காட்ட அர்ச்சுனன் அவசரப்பட்டதன் விளைவு இது. பிரச்சனைக்கான தீர்வு அதற்குள்ளே உண்டு என்ற ஆன்றோரின் வாக்கை நிரூபிக்க எங்களுக்கு ஒரு உபாயம் சொல்லி அருள வேண்டும்’ என்று கைகூப்பி நின்றான் யுதிஷ்டிரன்.

‘பாண்டு மன்னரின் மூத்த குமாரரே, அரண்மனையில் ஆயிரம் சேடியரின் சேவையில் பசியாற வேண்டிய அரசியான திரௌபதி ஒரு மாங்கனிக்காக ஏங்க வேண்டிய நிலையை சிருஷ்டித்தது யாரென்று தாங்கள் சிந்திக்க வேண்டும். பாஞ்சாலியைப் பணயமாக வைத்து பகடையாடியது அவசரக்-காரரின் செயலா அல்லது நிதானமாக சிந்தித்து செயலாற்று-பவரின் செயலா என்பதையும் அறிய விரும்புகிறேன்’ என்றான் அர்ச்சுனன்.



‘யுதிஷ்டிரா, பார்த்தா, இணக்கமின்மை இன்னல்களை அதிக-மாக்குமே அன்றி ஒருபோதும் இன்பத்தைத் தரப் போவதில்லை. தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை கைமேலிருக்கும்போது சகோதரர்கள் அதைப்பற்றி சிந்திக்காமல் சச்சரவு செய்வது வியப்பாக இருக்கிறது’ என்றான் கிருஷ்ணன்.

‘மன்னியுங்கள்’ என்று இருவருமே ஒரே சமயத்தில் கூறினர். யுதிஷ்டிரன் பார்த்தனின் தோளைச் சுற்றி கை வைத்ததும், ‘அரசே, தாங்களும் என்னை மன்னிக்க வேண்டும்’ என்று அர்ச்சுனன் தன் தமையனிடம் கூறினான்.

‘ரிஷியின் மாங்கனி சத்தியத்திற்கு கட்டுப்படும்’ என்றான் கிருஷ்ணன்.

‘ஜடம் சத்தியத்திற்கு கட்டுப்படும் என்று தாங்கள் கூறுவது நான் இதுவரை கற்றறிந்தவற்றை ஏளனம் செய்வது போலிருக்-கிறது’ என்றான் சகாதேவன்.

‘பாண்டவர்களாகிய நாங்கள் இதுவரை சத்தியம் தவறியதே இல்லை. எங்களை விட்டு மக்களோடு, மாக்களோடு ஜட-மனைத்தும் நீங்கி விட்டனவே’ என்றான் யுதிஷ்டிரன்.

‘சத்தியம் என்று நீயே ஒன்றை நினைத்துக்கொண்டால் அது சத்தியமாகி விடாது. சத்தியம் என்று நீ அறிவது சத்தியமல்ல’ என்றான் கிருஷ்ணன்.

‘சத்திரிய தர்மத்திற்கு ஏற்புடைய சூதாட்ட அரங்கில் சத்தியம் எங்களைக் காக்கவில்லை’ என்றான் நகுலன்.

‘போர்க்காலத்தில் மதுவுண்டுப் பிளிறி வரும் மதயானைகள் மோதித் தகர்க்க முடியாத கோட்டைக் கதவுகளை, இடைவிடாமல் அரிக்கும் கறையான்கள் காற்றில் கரையும் துகள்களாக்கி விட முடியும்! என்றோ நடக்கும் பகடையாட்டம் போன்ற பெருநிகழ்ச்சிகளில்தான் நம் வாழ்வைத் தீர்மானிக்கும் சத்தியம் இருப்பதாக நினைக்காதே. நம் அன்றாட வாழ்வில் செய்யும் செயல்களில், ஏற்கும் எண்ணங்களில், உருவாக்கும் உணர்ச்சிகளில் உள்ளதே சத்தியம். அதுவே நாம் யார்

என்பதைத் தீர்மானிக்கும். நம் வாழ்வின் ஏற்றங்களையும், இறக்கங்களையும் தீர்மானிக்கும்' என்றான் கிருஷ்ணன்.

'அன்றாட வாழ்வில் நான் தர்மத்திலிருந்து வழுவியதில்லை' என்றான் யுதிஷ்டிரன்.

'யுதிஷ்டிரா, வாழ்வு காட்டுவதே சத்தியம். நாம் பார்க்கும் விதம் சத்தியத்திற்குப் புறம்பானதாக உள்ளது. சூதாட்டமோகம் சகுனியிடமோ, பொறாமை துரியோதனனிடமோ, குரூரம் துச்சாதனனிடமோ இல்லை. அம்மாவீரர்கள் உங்கள் அகத்தை பிரதிபலிக்கும் புறஆடிகளே. ஆடியில் தெரியும் பிம்பம் தன் பிம்பமல்ல என்றெண்ணிக் கொள்பவன் சத்தியத்திலிருந்து விலகி விடுகிறான்' என்றான் கிருஷ்ணன்.

'ஆடிகளை அழிப்பேன். பிம்பங்களையும் அழிப்பேன். நான் நானாக இருப்பேன்' என்றான் பீமன்.

'சத்திரியன் சிந்திப்பது குருதியின் மேலமர்ந்து. வேதநூல்களின் மேலமர்ந்தல்ல' என்றான் பார்த்தன்.

'ஆடிகளை அழிக்கவும், குருதி மேலமர்ந்து சிந்திக்கவும் வேண்டுமானால் மகரிஷியின் சினத்திற்கு ஆளாகாமல் பிழைத்திருக்க வேண்டுமே! பாண்டுவின் மைந்தர்களே, பிரபஞ்சத்தில் எப்பொருளிலும் ஆன்மா உள்ளது. நம் புலன்களால் அறிய முடியாததை அது அறியும். இயற்கையால் செய்ய முடியாததை அது செய்யும். மனிதமனம் குறுக்கிடாத தூயசத்தியம் வெளிப்படும் இடங்களில் மட்டும் அது செயல்படும். உங்களில் ஒவ்வொருவரும் தன்னைப் பற்றிய மெய் ஒன்றை, பொய்யின் சாயல் சிறிதுமற்ற மெய் ஒன்றைக் கூறினால், கனி தன் பிறப்பிடத்தில் சென்று அமர்ந்து கொள்ளும்' என்றான் கிருஷ்ணன்.

'என்னைப் பற்றிய மெய் என்பது எது?' என்றான் பீமன்.

'எதைப்பற்றி உன் மனம் இரவும், பகலும் ஓய்வின்றி சிந்திக்கிறதோ அதுவே நீ, அதுவே உன்னைப் பற்றிய கலப்பற்ற தூயமெய் என்று அறிவாயாக. அறிந்ததை வெளிப்படுத்தும் துணிவைப் பெறுவாயாக' என்றான் கிருஷ்ணன்.



மரத்தின் அடியில் ஒரு இலைமீது மாங்கனி வைக்கப்பட்டது.

யுதிஷ்டிரன் அதனருகே நின்றான். 'தான் அர்ச்சுனன் மீது கொண்ட குரோதத்தைச் சொல்ல வேண்டுமா? என சிந்தித்தான். அது கணநேர குரோதமே. தன் மனதை இரவும், பகலும் ஆட்டுவிப்பது அதுவல்ல.

பின் எது?

'நான் ஆன்றோருக்கும், சான்றோருக்கும் இடைவிடாமல் அன்னதானம் செய்ய வேண்டும் என்பதே என்னுள் தொடர்ந்திருக்கும் எண்ணம்' என்றான்.

கனி சற்றும் அசையாத கல்லாக இருந்தது. தன் சகோதரர்களின் பார்வைகளை சகிக்க முடியாத யுதிஷ்டிரன், 'கிருஷ்ணா, நான் பேசியது சத்தியமே' என்றான்.

'சத்தியம் முழுமையானது என்றால் கனி உயரும்' என்றான் கிருஷ்ணன்.

பெருமூச்சு விட்ட யுதிஷ்டிரன், 'நான் இழந்தவற்றைத் திரும்பப் பெற்று அரசனாக வேண்டும். அவ்வாறு நடக்குமேயானால் ஆன்றோருக்கும், சான்றோருக்கும் இடைவிடாமல் அன்னதானம் செய்வேன்' என்றான்.

மாங்கனி தரையிலிருந்து எழுந்து சற்று உயரத்தில் நின்றது.

பீமன் மரத்தருகே சென்றான். 'துரியோதனனையும் அவன் தம்பிகளையும் கொல்வேன். துரியோதனன் மற்றும் துச்சாதனன் குருதியைக் குடிப்பேன். அவர்களது குருதியை சுவைப்பதையே என் மனம் இடைவிடாது நாடுகிறது' என்றான்.

மாங்கனி மேலும் சற்று உயர்ந்தது.

அர்ச்சுனன் மரத்தருகே சென்றான். 'கல்விக்கு முடிவேது? வில்வித்தையில் நான் கற்றறிய வேண்டியவற்றை கற்க வேண்டும் என்பதே என்னை ஆட்டுவிக்கும் எண்ணம்' என்றான். கனி மேல் நோக்கி நகரவில்லை. தொடர்ந்து பேசினான் அர்ச்சுனன், 'அவ்வாறு கற்பதன் மூலம் வில்வித்தையில் உலகில் சிறந்தவனாகி கர்ணனைக் கொல்வேன்' என்றான்.

மாங்கனி மேலும் சற்று உயர்ந்தது.

நகுலன் மரத்தருகே சென்றான். 'எதிர்காலம் என்னவென்று அறிய முடிந்தாலும், அறிந்ததை அடுத்த கணமே மறந்து விடுகிறேன். யுதிஷ்டிரர் அரசாளும்போது அவரருகே நின்றிருந்து எதிர்காலத்தை கணித்து சொல்லியவண்ணம் இருப்பேன். நான் மறந்தாலும் அரசர் என் வார்த்தைகளை நினைவில் வைத்திருந்து அதன்படி அரசாளுவார்' என்றான். கனி உயரத் தயங்கியது. 'யுதிஷ்டிரருக்கு கூறும் சொற்கள் மூலம் நானே பாரதவர்ஷத்தின் மீது அதிகாரம் செலுத்துவேன்' என்றான்.

மாங்கனி மேலும் சற்று உயர்ந்தது.

சகாதேவன் மரத்தருகே சென்றான். 'எதிர்காலம் என்னென்று அறிய முடிந்தாலும், அறிந்ததை கூறினால் என் தலை சிதறிவிடும். அரசரோடு இருந்தால் என்னால் கருத்து கூறாமல் இருக்க முடியாது. நான் அன்னை குந்தியோடு இருந்து அவருக்கு சேவை செய்து வாழவேண்டும்' என்றான். கனி உயரத் தயங்கியது. 'மாமா சல்லியரின் ஆலோசனையைக் கேட்டிருந்தால், அன்னையோடு, மனைவியோடு, சகோதரர்களோடு மத்ராவின் மன்னர்களாக நானும், நகுலனும் இருந்திருப்போம்' என்றான்.

மாங்கனி மேலும் உயர்ந்து தான் பிறந்த கிளையைத் தொட்டு நின்றது.

திரௌபதி மரத்தருகே வந்து நின்றாள். அப்போது வீசிய அனல்காற்றில் கிருஷ்ணையின் அவிழ்ந்த கூந்தல் பறந்தது. 'என் கூந்தலை முடிக்கும் நாளைப் பற்றி மட்டுமே நான் ஓயாது எண்ணமிட்டு வருகிறேன்' என்றாள்.

கனி மண்தரை மீது விழுந்து உருண்டது.

'திரௌபதி, என்ன இது?' என்று அன்புடன் கேட்டான் அர்ச்சுனன்.

கண்களை மூடினாள் பாஞ்சாலி.



நாணதிரும் ஒலி அவள் நெஞ்சில் எழுந்தது. எங்கிருந்தோ வந்த அம்பொன்று அவள் இதயத்தைத் துளைத்தது. அவளிடமிருந்து பெருமூச்சு ஒன்று எழுந்தது. வனத்தின் வெப்பம் அதிகரித்தது. கடலாழத்தில் நீந்திக் கொண்டிருந்த திமிங்கலம் ஒன்று கடலின் மேற்பரப்பிற்கு வந்தது. மேகத்தின் நடுவே மறைந்திருந்த முழுநிலா வெளிப்பட்டது போல ஒரு காட்சி வெளிப்பட்டது. மறைந்திருந்து வெளிவந்தது வெண்ணிலவுதானா? கதிரவனைப் போல வீசுகிறதே?

அழிப்பதெற்கென்றே அக்னியில் இருந்தெழுந்த பாஞ்சாலியின் சுயம்வரம்.

துருபதத்தின் மன்னனான யக்ஞசேனன் தன் தலைநகரான காம்பில்யத்தில் தன் பிரிய மகள் திரௌபதிக்கு சுயம்வரம் நடத்த ஏற்பாடு செய்தான். பாண்டு புத்திரர்கள் அரக்கு மாளிகையில் மாண்டு விடவில்லை என்ற செய்தி ஒற்றர்கள் மூலம் கிடைத்திருந்தது.

அர்ச்சுனனே தன் பெண் கிருஷ்ணையை மணக்க வேண்டும் என்று விரும்பினாலும் அதை எவரிடமும் வெளியிடாதிருந்தான். திருமணம் முடிந்த பின்பே அதை திரௌபதியிடம் கூறினான். துரோணருக்காக அர்ச்சுனன் தன்னை போரில் வென்றதை துருபதன் மறக்கவில்லை. அவனுக்கு தன் பெண்ணை தானம் தந்து ஆசி தர விரும்பினான். அர்ச்சுனன் மட்டுமே வெற்றி பெற வேண்டுமென்பதற்காக பல கொல்லர்களைக் கொண்டு, எவராலும் எளிதில் நாணேற்றிவிட முடியாத வில்லொன்றைச் செய்தான். வானில் சுழலும் சிக்கலான யந்திரமொன்றை நிறுவி அதில் சிறுபுள்ளியை இலக்காக வைத்தான். மாறுவேடத்தில் பாண்டவர்கள் உயிருடன் இருப்பதை தான் அறிந்திருப்பதை அர்ச்சுனனுக்கு உணர்த்த ஐந்து கணைகளையும் வில்லருகே வைத்தான்.

'நற்குலத்தில் பிறந்த அரசகுமாரர்களில் எவர் இவ்வில்லுக்கு நாண்பூட்டி, கணை கொண்டு இலக்கை துளைக்கிறாரோ அவருக்கு என் தங்கை யக்ஞசேனி மாலையிடுவாள்' என திருஷ்டத்யும்னன் அறிவித்தான்.

'ஏன் ஐந்து கணைகள்?' என்று கிருஷ்ணனை வினவினாள் கிருஷ்ணை.

'உன் தந்தையை கேட்க வேண்டிய கேள்வி' என்றான் கிருஷ்ணன்.

'நீர் நினைப்பது என்னவோ?' என்று கேட்டாள் திரெளபதி.

'கிருஷ்ணை, இந்த வித்தையை ஐவரால் மட்டுமே நிகழ்த்திக் காட்ட முடியும். ஏகலைவன் விரலை துரோணர் வாங்கிக் கொண்டுவிட்டார். பீஷ்மர் விரதமேற்றவர். உன் தந்தையின் நண்பரான துரோணர் உன் தந்தையே ஆவார். மீதி இருப்பவர்கள் கர்ணனும், அர்ச்சுனனுமே' என்றான் கிருஷ்ணன்.

'இருவரில் எவர் எனக்கு ஏற்றவர்?' என்றாள் திரெளபதி.

'சுயம்வரம் உன்னுடையது. என்னுடையதல்ல. தீர்மானிக்க வேண்டியவள் நீ' என்றான் கிருஷ்ணன்.

'வழி காட்டவேண்டியது ஞானியின் கடமை அல்லவா?' என்று கேட்டாள் திரெளபதி.

'பிறரது கர்மத்தில் குறுக்கிடாதிருப்பதே ஞானியின் தர்மமாகும்' என்று பதிலிறுத்தான் கிருஷ்ணன்

'இவ்வழியில் செல் என நீர் ஆணையிட்டால் என் பாதை கதிரொளி பரவிய மலர்ப்பாதையாக இருக்குமே' என்றாள் திரெளபதி.

'பாதையின் ஒளியையும், மென்மையையும் புலன்கள் புறத்தில் வாழ்பவனுக்கு பெற்றுத் தருகின்றன. அகத்தில் வாழ்பவனுக்கு எப்பாதையும் ஏற்கப்படவேண்டியதே, பாதைகளின் எண்ணிக்கையை அவன் பொருட்படுத்துவதில்லை. அவனுக்கு ஒற்றை சத்தியம் மட்டுமே இலக்கு' என்றான் கிருஷ்ணன்.

'இறுதிக்கு இட்டுச் செல்லும் உறுதியான ஒற்றைப் பாதை எதுவுமே இல்லையா? என்று கேட்டாள் திரெளபதி.

'பாதை ஒருபோதும் ஒற்றையானதல்ல. ஒவ்வொரு அடி எடுத்து வைத்ததும் அது பலவாக பிரிந்தே செல்லும். செல்-



பாதையை நான் சொல்லித் தந்தாலும், பாதையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உனக்கு உண்டு' என்றான் கிருஷ்ணன்.

'நான் அங்கமன்னருக்குத்தான் மாலையிட நேருமா? அர்ச்சுனரைப் பற்றி கேள்விப்பட்ட துயரச் செய்தி உண்மையானதாக இருந்தால் அவரெப்படி இங்கு வர முடியும்?' என்றாள் திரெளபதி.

'தவறான செய்தி ஆதாரமற்றதாக இருந்தால், ஆதாரம் கிடைக்கும்வரை அதை ஏற்க மறுப்பதே அறிவுடைமை. நீதி வழங்குதலின் அடிப்படை அதுவே' என்றான் கிருஷ்ணன்.

'அங்கமன்னர் சூதரால் வளர்க்கப்பட்டவர். அவர் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர் என்று நிரூபணம் செய்ய எவரிடமும் ஆதாரமில்லை. ஆதாரமின்மை அவருக்கு நீதியைப் பெற்றுத் தரவில்லையே!' என்றாள் திரெளபதி.

'பாண்டவர்களும், கெளரவர்களும் இன்னமும் இளவரசர்களாகத்தான் இருக்கிறார்கள். கர்ணனோ இளவரசனாகாமலே நேரடியாக அங்கநாட்டு மன்னனாகி விட்டானே' என்றான் கிருஷ்ணன்.

'அதன் பொருள் என்ன?' என்றாள் திரெளபதி.

'மனிதன் அநீதி இழைத்தாலும் வாழ்வு நீதி தர ஒருபோதும் தவறாது' என்றான் கிருஷ்ணன்.

'நான் அங்கமன்னருக்கு மாலை சூடலாமா?' என்று கேட்டாள் திரெளபதி.

'அவன் அறநெறி பிறழாத குணங்கொண்ட உத்தமன். அதே சமயம் தன் வித்தையில் கர்வம் கொண்டவன்' என்றான் கிருஷ்ணன்.

'எந்த வீரனையும் நிராயுதபாணியாக்கும் வல்லமை பெண்ணின் விழிகளுக்கு உண்டு' என்று புன்னகையோடு நினைத்துக் கொண்டாள் திரெளபதி. 'வேறென்ன பெருங்குணங்கள் அவரிடம் உள்ளன?' என்று கேட்டாள்.

'எந்த மனிதனும் பிறக்கும்போது அப்பிறவிக்கென்று ஒரே ஒரு பெருங்குணத்தோடும், அதை ஆதரிக்கும் அல்லது

எதிர்க்கும் சில சிறிய குணங்களோடும் பிறக்கிறான். வேறொரு பெருங்குணத்தை அடுத்த பிறவியில்தான் பெறுகிறான்' என்றான் கிருஷ்ணன்.

'ஆனால் என் மனம் பெருங்குணங்கள் அனைத்தும் கொண்ட கணவரையே நாடுகிறது' என்றாள் திரௌபதி.

'அப்படிப்பட்டவர் இன்னமும் பிறக்கவில்லை. பிறந்து விட்டவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுப்பது புத்திசாலித்தனம்' என்றான் கிருஷ்ணன்.

'கிருஷ்ணா, பாதுகாப்பு மட்டுமே வாழ்க்கை என்றால் அதை ஒரு படைவீரனால் கூட தர முடியுமே! வில் திறமை மட்டுமே பெண்ணுக்கு மன நிறைவைத் தருமா? அதுவே போதுமா?' என்றாள் திரௌபதி.

'போதாதுதான். நற்பண்புகளும், பெருங்குணங்களும், அற-நெறிகளும் மனிதனை உயர்ந்தவனாக்குகின்றன. அவனையே தன் கணவனாக பெண் ஏற்க வேண்டும்' என்றான் கிருஷ்ணன்.

'குணம் பழகிய பின்னாலல்லவா தெரிய வரும்? தோற்றத்தையும், தோள்வலிமையையும் கொண்டு குணத்தை அறிய முடியாதே. நான் வென்றவருக்கு மாலைசூட்டி பின் அவரோடு வாழ்ந்தல்லவா குணத்தைப் பற்றி அறிய முடியும்?' என்றாள் திரௌபதி.

'விழிகள் இதயத்திலிருக்கும் ஆன்மாவின் சாளரங்கள். நீ பார்ப்பவனைப் பற்றி உன் ஆன்மா சொல்வதென்ன என்று தெரிந்து கொள்' என்றான் கிருஷ்ணன்.

மீன்கொடி படபடக்கும் தென்றல் தேரில் தன் காதலி ரதிதேவியோடு சுயம்வர மண்டபத்திற்கு எவரும் அறியாமல் வருகை தந்து மறைந்திருந்த வசந்தமார காமதேவன் இன்னிசை எழுப்பும் வண்டுகளை நாண்களாக ஏற்றிய கரும்புவில்லில் தாமரை, அசோகம், மாம்பூ, முல்லை, குவளை மலர்க்கணை-களை பூட்டி அங்கிருந்தவர்கள் மீது தொடுத்த வண்ண-மிருந்தான். இதயங்களைத் தாக்கிய தாமரைக்கணை திரௌபதியின் மீது காதலுணர்வை எழுப்பி உன்மத்தம்



கொள்ளச் செய்தது. இதழ்களைத் தாக்கிய அசோகக்கணை அவளது பெயரைச் சொல்லிச் சொல்லிப் புலம்ப வைத்தது. கண்களைத் தாக்கிய முல்லைக்கணையோ அவளை மட்டுமே எங்கும் எதிலும் காண வைத்தது. சிரத்தை தாக்கிய மாம்பூக்கணை சித்தமெல்லாம் அவளது நினைவை நிறைத்தது. உடலெங்கும் ஊடுருவிய குவளை மலர்க்கணை திரௌபதி கிடைக்காவிட்டால் உயிரை விடுவதே உத்தமம் என்று ஏங்க வைத்தது.

சபையில் கூடியிருந்த அந்தணர்களும், சத்திரியர்களும், வைசியர்களும், சூதர்களும் சுயம்வர வில்லையோ, கணை-களையோ, யந்திரத்தையோ காணவில்லை. மன்மதனின் ஐந்து மலர்க் கணைகளால் தாக்கப்பட்டவர்கள் திரௌபதியின் புருவ-விற்களையும் பார்வைக்கணைகளையும் கண்டு மயங்கி இருந்தனர். அரங்கத்திற்குள் நுழையும் தகுதி மறுக்கப்பட்ட வருணமற்றவர்கள் தாங்கள் கேள்விப்பட்டவற்றை வைத்து திரௌபதியை கற்பனையில் கண்டு களித்தனர்.

பூரிப்புடன் அரங்கத்தை சுற்றிலும் பார்த்த திரௌபதி கர்ணனைக் கண்டதும் திடுக்கிட்டாள்.

அவனது கவனம் பாஞ்சாலி மீதில்லை. அவன் வில்லின் வனப்பையும், யந்திரத்தின் அமைப்பையும் காதலுடன் கவனித்துக் கொண்டிருந்தான். மன்மதனின் பாணங்கள் அவனை அணுக அஞ்சி செல்திசை விலகி வீழ்ந்து கிடந்தன.

திரௌபதியின் கர்வம் சீண்டப்பட்டது.

'மாவீரரே, வில் என்பது கருவியே. அதன் மூலம் தாங்கள் பெறப்போகும் பெரும்பொக்கிஷத்தை முதலில் பாருங்கள்' என்று மௌனமாகக் கூறினாள்.

அவன் கவனம் மாறவில்லை.

கர்ணனின் பெயர் அறிவிக்கப்பட்டது.

தன் இருக்கையிலிருந்து எழுந்து வில்லை நோக்கி நடந்தான்.

'என்னைப் பாரும் வீரரே. நான் பெண். உமக்கு என்னிடம் நீதி கிடைக்கும்.'

வில்லை வணங்கிய கர்ணன் எவராலும் அசைக்க முடியாத வில்லை தன் வலக்கரத்தால் எளிதாகத் தூக்கினான்.

'ஆம், இவர் மாவீரர். வில்லை ஏந்தி விட்டார். இனி என்னைப் பார்க்கப் போகிறார்!'

கர்ணனின் கவனம் நாணிலிருந்தது. பாஞ்சாலியின் மனம் அவன் பார்வையால் தன்னிடம் உருவாகப் போகும் நாணத்தை நினைத்தது.

'ஒரே ஒரு முறை என்னைப் பாரும். காலமெல்லாம் உம் ஆணைக்காக நான் காத்திருப்பேன்.'

நாணேற்றி விட்டான் கர்ணன். அரங்கமே ஆரவாரம் செய்தது.

திரௌபதியின் பெண்மனம் தன்னைப் பெற்றவர்கள் யாரென்று அறியாமல் அவமானத்தை மட்டும் அறிந்து வளர்ந்த ஆதரவற்ற ஆண்மகனுக்கு அன்பைத் தந்து அவனுக்கு தாயுமானவளாகத் துடித்தது. 'இதோ தாயுமானவளாக நான் காத்திருக்கிறேன். என்னைப் பார்ப்பீராக.'

கர்ணன் கணையை வில்லில் பூட்டிவிட்டான்.

'வீரனே, வில்லோ, வித்தையோ முக்கியமில்லை. நானே உனக்கு முக்கியம்.'

குறி நோக்கி, நாணை இழுக்க ஆரம்பித்தான் கர்ணன்.

'என்ன கர்வம்! என்ன ஆணவம்! என்னைவிட வில்தான் உனக்குப் பெரிதா?'

வெகுண்டு எழுந்தாள் திரௌபதி.

'சூதனே, சரம் தொடுக்க நீ சத்திரியனல்ல. சவுக்கே உன் குலக்கருவி. நீ வென்றாலும் தாழ்ந்த குலத்தவனான உன்னை ஏற்க மாட்டேன்' என்றாள் திரௌபதி.

சிறிது நேரம் திகைத்து நின்றான் கர்ணன். முன்னொரு நாள் விளையாட்டு அரங்கில் அர்ச்சுனன் சொன்ன அதே வார்த்தைகள். துரியோதனின் அன்பால் அங்கமன்னனான பின் இன்றுதான் மீண்டும் அந்த வார்த்தைகள் அவன் செவிகளில் விழுகின்றன.



தன் மகன் வில்லேந்தி வெற்றிமாலை சூடப் போவதைக் காணக் காத்திருந்த கதிரவனை கர்ணன் பார்த்தான். கதிரவன் சினத்தோடு கடும்வெப்பத்தை உமிழ்ந்தான். அக்னியில் பிறந்த திரௌபதியாலும் அந்த அனல்வீச்சைத் தாங்க முடியவில்லை. அவளது கரியநிறத் தோல் மேலும் கருமை கொண்டது.

கர்ணன் முதல்முறையாக திரௌபதியைப் பார்த்தான். பார்வைகள் மோதின. கர்ணனின் பார்வையிலிருந்த ஏளனத்தைத் தாங்க முடியாமல் திரௌபதியின் விழிகள் நிலம் நோக்கித் தாழ்ந்தன.

'உன் கர்வத்தை ஒருபோதும் மறவேன்' என்றன திரௌபதியின் விழிகள்.

'உன் சொற்களை ஒருபோதும் மறவேன்' என்றன கர்ணனின் விழிகள்.

'சூதனே, உன்னை என்னால் வெல்ல முடியாது. என்னை பணிபவனே எனக்கு வேண்டும். உன் நித்யபகைவனே என் கணவன்' கர்ணனுக்கு மௌனமொழியில் விடைகொடுத்தாள் கிருஷ்ணை.

கசப்புடன் வில்லை வீசி எறிந்துவிட்டு இல்லம் திரும்பினான் கர்ணன். அவன் வீசி எறிந்த வில்லை தானெடுத்து நாணேற்றலானான் அந்தண அர்ச்சுனன்.

'சூதாட்டக்களத்தில் ஒற்றை ஆடையோடு இருந்த என்னை துரியோதனனும், துச்சாதனனும் அடிமை என்று அழைத்து அவமதித்தனர். அவர்கள் குருதியால் என் கூந்தலை நனைக்க விரும்பினேன். ஆனால். என்னை கற்பற்றவள் என்றழைத்தவன் கர்ணனே. அவனல்லவா எனது ஆடைகள் களையப்பட வேண்டுமென்றவன்? அதிகபட்ச அவமரியாதை செய்தவனை எதிர்த்து ஏன் அன்று அவையில் நான் எதுவும் கூறவில்லை? கர்ணனின் குருதி வேண்டும் என்று ஏன் என்னால் கேட்க முடியவில்லை? ஏன் என்னால் அவனை வெறுக்க முடியவில்லை?' தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள் திரௌபதி. அவளுக்கு விடை கிடைக்கவில்லை.

உரத்த குரலில் கூறினாள் திரௌபதி, 'என் மனம் வில்லேந்தும் சூதனை இடைவிடாமல் எண்ணியெண்ணி வேதனையுறுகிறது'

கதிரவன் கனிந்திரங்கினான். வனத்தின் மேலிருந்த வானத்தை கருமேகங்கள் சூழ்ந்தன. 'தனியொரு பெண்ணின் தூயசத்தியம் வறண்டு விட்ட வனத்திற்கு வாழ்வு தரும்' என்று குளிர்ந்த காற்று கூறியது. அதை ஏற்று 'ஆம், ஓம்' என்ற ஞானஒளியாக மின்னல்-கீற்று தெறித்தது. அதை ஆமோதித்து 'ஆம், ஓம்' என்ற வேதவொலியாக இடியோசை எழுந்தது. புலிகள் உறுமின. மான்கள் துள்ளின. தாவரங்கள் தலை-யசைத்தன. வனமண்ணை அருள்வெள்ளத்தில் மூழ்கடிக்கப் போகும் பெருமழையின் முதல்துளி திரௌபதியின் அவிழ்ந்த கூந்தலின் மீது விழுந்தது.

கர்ணனின் வில்லிலிருந்து வேகத்துடன் புறப்படும் கணை தன் இலக்கை சரியாக அடைந்தடங்குவது போல, தரையில் கிடந்த மெய்ம்மாங்கனி விசையுடன் எழுந்து மரத்திலிருந்த தன் பிறப்பிடத்தை அடைந்து தன்னைத் தானே கச்சிதமாகப் பொருத்திக் கொண்டது.

(முற்றும்)

### ஜீவிய மணி

அருள் நெறியின் அற்புத சக்தி உன்னில் செயல்-படுகிறது. மனம் அதைத் தன் கருத்துக்கு இசைய வைக்க முயல்கிறது. உள்ளம் தன் வயம் இழக்கத் தயாராகிறது. சொந்தத் திருப்திக்கு எந்த அளவில் இந்தச் சக்தி உதவும் என உடல் கருதுகிறது. எதற்கும் எள்ளளவும் இடமில்லை. இம்மியளவு இடம் கொடுத்தாலும் புனிதம் புரையோடிப்போகும்.



## ஜீவனில் நிறையும் எண்ணம்

கர்மயோகி

ஐம்புலன்கள் பார்வை, ருசி, கேட்பது, வாசனை, தொடுவது மூலம் செயல்படுகின்றன.

மனம் செயல்பட எண்ணம் அதன் கருவி.

ஆத்மா மனத்தைக் கடந்தது, **Spirit**.

ஆத்மா மௌனத்தால் செயல்படும்.

அன்னையை எண்ணம் முழுமையாக ஏற்றால் செயல்படுவது மௌனத்தைக் கடந்த மௌனம் - பிரம்ம மௌனம். எண்ணத்தில் சிறந்தது நல்லெண்ணம், பிறர் மீது எழும் நல்லெண்ணம் எண்ணத்தைக் கடந்த முழு எண்ணம், ஜீவ எண்ணம் **(Real-Idea)** என்ற பெரிய நிலை.

நமக்கு நெருக்கமானவர், உண்மையானவர், பிரியமானவர் - தாயார், அண்ணன், மகன் - மீது எழும் நல்லெண்ணம் தெய்வீகமானது.

ஒருவருக்கு ஒரு விஷயத்தில் - வருமானம் (அ) உடல் நலம் - நல்லெண்ணம் கொள்வது சிறப்பு. அது முடிந்தால் அதன் நிலையை உயர்த்தலாம். (உ.ம்) வருமானம் 30,000 உயர்ந்து 50,000-மாக நினைக்கலாம். நினைத்தால் நினைவு பலிக்கும். அதைக் கூடியவரை உயர்த்தலாம். ஒருவருக்கே பல விஷயத்தில் நல்லெண்ணம் அனுப்பினால் பலிப்பதைக் காணலாம். நமக்கு அந்தரங்கமாக வேண்டிய ஒரு சிலருக்கு மட்டும் அனைத்து விஷயத்திலும் அதிகபட்ச நல்லெண்ணம் அனுப்பினால், அது பலிக்கும்.

அவருக்கு தனிப்பட்ட சமர்ப்பணம் தேவையில்லை.

பிறருக்கு நல்லெண்ணம் தருபவர் தனக்காகப் பிரார்த்திக்கும் அவசியமேயில்லை.

நல்லெண்ணம் சமர்ப்பணமாகும்.

நல்ல எண்ணம் எழுந்தபின் அதை அவருக்கு அனுப்புவதை-விட சமர்ப்பணம் செய்வது உசிதம்.

இது ஒரு எளிய யோகப் பயிற்சி.

நல்லெண்ணம் மனதில் எழும்பொழுது மனம் இனிமையாக இருப்பது தெய்வீக ஆத்ம நிலை.

இதைச் செய்வது ஆத்மாவை அன்றாட வாழ்வில் அறிவது.

அது பூரண யோக சித்தியாகும்.

ஒரு நல்லெண்ணம் ஒருவருக்குப் போக வேறு எந்த விஷயத்திலும் ஒரு கெட்ட எண்ணமும் எழக் கூடாது.

கெட்ட எண்ணம் அழிய நல்லெண்ணம் எழுவது உதவும்.

யோகத்தை ஏற்று சாதகனாவதைவிட நல்லெண்ணம் எழுவது பெரிய மன நிலை.

எண்ணமே கெட்டது என அன்னை கூறுவதால் எண்ணத்தை நல்லதாக மாற்றி பிறருக்குத் தருவது வாழ்வே யோகமாக மாறுவது.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**பலிக்கத் தவறாத சமர்ப்பணம் தவறாது தொடர்ந்தால் பலித்ததைக் கடந்த பவித்திரமான பக்குவமான பிரம்மத்தை அடையும்.**

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

## கயமைக்குப் பரிசு

திருடன் பல நாள் பிடிபடாமல் சொத்து சேர்ப்பது எப்படி? திருடனும் மனிதன். அவனும் முன்னேற வேண்டும். அவன் திருட்டை நம்பினால் திருடு பலிக்கும். திருடு தவறு என நினைத்தால் அகப்பட்டுக் கொள்வான். கிராஸ்பீ என்ற நாயகன் சிறு பெண்ணுடன் 2 மாதம் அவள் வீட்டிலிருந்து நெருங்கிப் பழகி மணம் முடிப்பதாக வாக்குக்குக் கொடுத்து, அங்கிருந்து ஒரு பெரிய இடத்திற்குப் போய் பணமில்லாத அவர்கள் வீட்டுப் பெண்ணை சட்டப்படி மணமுடித்தான். அவனை முதல் வீட்டார் தொடர்ந்தனர். தோட்டத்து வழியாக ஓடினான். அனைவரும் அவனைக் கயவன், கோழை, போக்கிரி என்றனர். நேரே ஆபீசுக்குப் போகிறான். எதிர்பாராத பெரிய பிரமோஷன் (£800லிருந்து £1200) வருகிறது. இவன் அயோக்கியன் என உலகமறியும். தானே அவன் தன்னை அயோக்கியன் என வர்ணிக்கிறான்.

- ஏன் துரோகியின் கயமைக்குப் பரிசு?
- பரிசு காரியத்தைப் பொறுத்ததில்லை, பெறுபவனைப் பொறுத்தது.
- கயமையால் முன்னேற வேண்டிய கட்டங்கள் உள்ளவரை கயவனின் கயமைக்குப் பரிசு வரும்.
- பிற்காலம் அவன் மனம் உயர்ந்து மாறினால் தண்டனை வரும்.

## முடிந்ததை முழுவதும் செய்ய முடியுமா?

ஒரு காரியத்தில் முக்கியமான பெரிய பகுதிகள், முக்கியமில்லாத சிறு பகுதிகள் உண்டு. சிறிய பகுதிக்கும் சில சமயம் முக்கியமான அம்சமிருப்பதை நாம் பொருட்படுத்துவதில்லை. Ph.D பட்டத்திற்கு ஆராய்ச்சி முடித்தவர், புரொபசர் கையெழுத்துப் போட மறுத்து விட்டார். 2 ஆண்டுகள் முடிந்து விட்டது. புரொபசர் மாற்றலாகிப் போய்விட்டார். 1 ஆண்டு எக்ஸ்டென்ஷன் கிடைத்தது. கையெழுத்து கிடைக்கவில்லை. 4-ஆம் ஆண்டிற்குப்பின் எக்ஸ்டென்ஷனில்லை. அனைவரும் பரிதாபப்படுகிறார்கள். வழி தெரியவில்லை. புரொபசர் கையெழுத்தில்லாமல் எதுவும் செல்லாது. செய்வதற்கு ஒன்றுமில்லை. கையெழுத்தில்லாமல் ஆய்வுக்கட்டுரையை வாங்கிக் கொள்ள மாட்டார்கள். வாங்கினாலும் செல்லாது. மாணவர் ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்குப் போய் “என்னால் முடிந்ததெல்லாம் இதை உங்களிடம் சமர்ப்பிப்பதுதான்” — என நினைத்து 300 மைல் பிரயாணம் செய்து கட்டுரையைச் சமர்ப்பித்தார். ரிஜிஸ்ட்ரார் “இந்தப் புரொபசர் இன்று அமெரிக்கா போகிறார், ஒரு வேளை கையெழுத்துப் போடலாம்” என்றார். மாணவர் புரொபசரைப் பார்த்தார். ஆரவாரமாக மாணவரை வரவேற்று கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்.

எவ்வளவு சிறியதானாலும், எவ்வளவு
அர்த்தமற்றதானாலும் முடியும் என்ற வேலை
பாக்கியானால் அதையும் செய்வது நல்லது.